விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 07 ஞாயிற்றுக்கிழமை (20.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 91

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## இராணுவம் வெளியேறினால்தான் கல்லெறி, ஹர்த்தால் முற்றுப்பெறும்

# இணைந்து வாழலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் அற்றுப்போய்விட்டது

## ஐ.நா. சபையில் சர்வதேச மனிதவுரிமை பொதுச் செயலர்

(கொழும்பு)

**ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழமுடியும் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்கள் இழந்துவிட்டனர். எனவே அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தக்கூடியநிலை தோன்றக்கூடுமென மக்களின் விடுதலைக்கும், உரிமைக்குமான சர்வதேச நிதியத்தின் பொதுச் செயலாளர் வெரீனா பிராப் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள இந்த அமைப்பு இலங்கையின் இன முரண்பாடுகளும், தீர்வுகளும் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வெரீனா பிராப்,

உள்நாட்டில் இரு தசாப்த காலமாக இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களால் இந்தநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்மக்கள் தமது இடங்களைவிட்டு இராணுவத்தினர் வெளியேறவேண்டுமென போராட்டங்கள் நடத்துகின்றனர். அதனையும் பொருட்படுத்தாது இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இதனால் மக்கள் இராணுவத்தினர் மீது வெறிகொண்டு சின்னச்சின்ன காரியங்களுக்கும் அவர்கள் மீது கல்லெறிகின்றனர். அத்துடன் ஹர்த்தால்களையும், போராட்டங்களையும் நடத்துகின்றனர். இது முற்றுப் பெறுமென நான் நினைக்கவில்லை.

எப்பொழுது தமிழ்மக்களுடைய பிரதேசங்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறுகிறார்களோ அப்போதுதான் இது முற்றுப்பெறும்.

2002இல் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது சமாதானம் குறித்த எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் தமிழ்மக்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால், தற்போது அந்த எதிர்பார்ப்புக் குறைவடைந்துவிட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதில் காணப்படும் இழுத்தடிப்பே இதற்குக் காரணமாகும். இதனைவிட சுனாமி அனர்த்தம் தொடர்பில் பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதிலும் இழுத்தடிப்புக் காணப்படுகின்றது. பொதுக்கட்டமைப்பு விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் சர்வதேச ரீதியில் நன்மதிப்பினைப் பெற்றுக் கொடுத்தாலும், தமிழ்மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தையும், மனத்தாக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார். (த-04)

## தமிழ்ச்செல்வன் குழு சுவிற்சர்லாந்தில்

அரசியல் பணியை முன்னெடுக்கும் முகமாக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் தமது விஜயத்தின் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், தமிழீழ மகளிர் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கீதா, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த கலைத் தமிழ் ஆகியோர் அடங்கிய அரசியல் குழுவினர் ஒருவார காலம் சுவிற்சர்லாந்தில் தங்கியிருந்து சுவிற்சர்லாந்தின் அரசு சார் பிரதிநிகள், வெளிவிவகார அமைச்சினர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

இவர்கள் நாளை மறுதினம் சுவிற்சர்லாந்து நாடாளுமன்றத்தில் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர். (04)

# தெளிவற்ற அரசியல் சூழல் நிலவுவதால் தமிழ்ச் சமூகத்தின் போக்கு மாறுகிறது

## யாழ். பல்கலையில் கா.வே.பாலகுமாரன்

(யாழ்ப்பாணம்)

தெளிவற்ற அரசியல் சூழல் நிலவுவதால் தமிழ் சமூகத்தின் மனநிலை மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறது. ஒரு தெளிவற்ற, சீரற்ற நிலை இருப்பதால் மனம் போனபடி வாழலாம் என்ற எண்ணம் பலருக்கு வருவதை நாங்கள் பார்க்கிறோம். எமது தலைமையின் தேவைகருதிய சில மௌனங்கள் இங்கு பலவாறாக அர்த்தப்படுத்தப்படுகிறது என விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தலைவர் பிரபாகரனை இலங்கையின் இராணுவத் தளபதியாக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச கூறியிருந்தார்.

ஜே.வி.பியைக் அழிக்க எங்களை அவர் பயன்படுத்த நினைத்தார். அவருக்கு 3 எதிரிகள் இருந்தனர். ஒன்று ஜே.வி.பி, மற்றது புலிகள், மூன்றாவது இந்தியா. மூன்று எதிரிகளையும் கையாள பிரேமதாசா எடுத்த தந்திரம் எல்லோருக்கும் தெரியும்.

நாங்கள் அவரைவிடத் தந்திரக்காரர். பிரேமதாசாவிடம் ஆயுதம் வாங்கி அவருக்கும் அடித்து, இவருக்கும் அடித்த ஆட்கள் நாங்கள். இதனைப் பார்த்து நீங்கள் சந்தோசப்படவேண்டும். பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். அதைவிட்டுவிட்டு இவங்கள் வரி அறிவிடுகிறாங்கள், அதைப் புடுங்குகின்றாங்கள் என்று கதைத்துக்கொண்டிருந்தால் நீங்களும் அழிந்து நாங்களும் அழிவதுதான் மிச்சம்.

எங்களுடைய போராட்டத்தை சர்வதேசமயப்படுத்தவேண்டிய தேவையொன்று இருக்கிறது. நாங்கள் எங்கு சென்றாலும் படித்தவர்கள் சொல்லுவார்கள் தம்பி என்னதான் நீங்கள் செய்தாலும், எப்படித்தான் அடித்தாலும், எத்தனை ஆனையிறவை விழுத்தினாலும் அது சரிவராது. ஏனென்றால் உங்களுக்கு சர்வதேசத்தில் ஒன்றுமில்லை. உங்களுக்கு சரியாக அரசியல் தெரியாது என்பார்கள்.

நீங்கள் பார்த்தீர்களானால் தமிழ்ச்செல்வன் குழுவினர் வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசை வாங்குவாங்கு என்று வாங்குகிறார்கள் என்றால் இதைவிட என்ன அதிசயம் உங்களுக்கு நிகழும். இந்த மாற்றங்கள் நிகழ்ந்நது எவ்வாறு?

கசிப்பு அடிக்காமல் என்னவிதமாக ஆறுசுற்று சமாதானப் பேச்சுக்களை சர்வதேச மயப்படுத்தினோம் என்பதைப் பாருங்கள். நாங்கள் பேசிப்போட்டு வந்ததல்ல செய்தி. எவ்வாறு சர்வதேச மயப்படுத்தினோம் என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

சுனாமியின் பின்னர் சண்டையைத் துவங்கியிருந்தால் நாங்கள் வென்றிருப்போம். ஆனால், இணைந்து பணிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பை வழங்குவோமென நாங்கள் இறங்கிப்போனோம். எங்களுடைய இந்தப் போக்கை உணர்ந்து கொண்ட சாட்சியாக பீற்றர் ஹரோல்ட் இருக்கிறார். அவர் சொன்னார், என்னவென்றால் உலகவங்கியின் உதவியுடனான புனரமைப்புத் திட்டங்களில் புலிகளையும் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்வோம் என்று.

போறபோக்கில் புலியையும் சேர்த்திருக்கிறது மாதிரி இருக்கிறதே என்று நாங்கள் யோசித்தோம். நாங்கள் போறபோக்கில் போறாக்கள் இல்லை. அந்த அபிவிருத்தித் திட்டங்களில் எங்களையும் சேர்த்தபடியால் இன்று அவர் வெள்ளைப் புலியாகியிருக்கிறார்.

தமிழ்மக்களின் அறிவுசார் தொகுதியாக இந்தக்களம் இயங்கவேண்டும். புலிகளுடைய போக்கு எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். ஆனால் எல்லாவற்றையும் தலைமைதாங்க எங்களால் முடியாது. புலிகள் உருவாக்கிக் கொடுக்ககூடிய தளங்களிலும் இடைவெளிகளிலும் வாய்ப்புக்களிலேயும் உள்நுழைந்து அதை விரிவாக்கி அறிவுள்ள சமூகமாக மாறுவதற்கு நீங்களும் நூல்கள் எழுதவேண்டும்.

எங்களுடைய அபிவிருத்தி, தமிழ்ச் சமூக அசைவியக்கம் எப்படியுள்ளன என்பதைபற்றி நூல் எழுதுங்கள் என்றார்.

தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் இ.புவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா, தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (த)

SWISS Mineral Water


Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# யாழ்ப்பாணம் கல்வியங்காடு

# ஸ்ரீமத் பத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரர் ஆலய

## மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 20.03.2005







### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி

சீர்மிகு கல்வியங்காட்டுப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வீரபத்திரப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகட்கும் நடைபெறும் கும்பாபிஷேகத்தின் மூலம் சகல மக்களுக்கும் நல்வாழ்வு கிடைக்க பிரார்த்தித்து இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்கேற்ற ஆலய ஸ்தானிகர் சிவஸ்ரீ வரதராசக் குருக்கள் மற்றும் ஆலய நிர்வாக சபையினர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். கும்பாபிஷேகத்தின் மூலம் அனைவருக்கும் வீரபத்திரப் பெருமான் திருவருள் பொலிய வாழ்த்துகிறோம் - சுபம்.

பிரதிஷ்டா பிரதமகுரு
முத்தமிழ்க்குருமணி
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீகதிரமலைச்சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்

### ஆலயபரம்பரைக் குருவின் ஆசிச் செய்தி

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அவ்வாக்கியத்திற்கு அமைய எமது கல்வியங்காடு எனும் ஊரின்கண் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன சிறப்பாக அமைந்து எழில்கொஞ்சும் அழகிய இயற்கையில் எழுந்தருளி அருள்பாலித்துக்கொண்டு இருக்கும் எமது குலதெய்வமாகிய பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானுக்கு இன்றைய தினம் குடமுழுக்கு செய்யும் வாய்ப்பினை எல்லாம்வல்ல சர்வேஸ்வரனின் திருவருள் கூடி எம்மை எல்லாம் தனது ஆளுகைக்குள்கூட்டி, எமது கிராமத்தவர்களின் காவலனாக, நண்பனாக, அடியவனாக எமக்கு நல்லருளை ஈட்டித்தருபவனாக இப்படியாக பற்பல குணங்கள் உடையவனாக இன்று எம்மை வழி நடாத்தி செல்கிறான் எங்கள் வீரபத்திரன். இன்று எமது கண்களால் அவன் குடமுழுக்கு கண்டுகளிக்க நாம் என்ன தவம் செய்தோம் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்பது மணிவாசகரின் வாக்கு. அதேபோல் வீரபத்திரனின் திருவருளினாலே அவனுடைய குடமுழுக்கு வைபவம் கண்டுகளிக்கும் எமது அன்பர்களுக்கு அவனுடைய அருள் கிடைக்கவேண்டிப் பிரார்த்திப்பதோடு, இந்த நாட்டில் இன்றுபோல் என்றும் சமாதானம் நிலவவும், எல்லா இனங்களும் மதங்களும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ எல்லாம் வல்ல வீரபத்திரனைப் பணிந்துவேண்டுகின்றேன்.

"மாசிலா மணிதிகழ் மேனிமேல் பூசுநீறுபோல உள்ளும் புனிதர்"களாக வாழவேண்டுகின்றேன்.

ஆலய பரம்பரைக் குரு
பொ.வரதராஜக்குருக்கள்

## அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வரலாறு

இறைவனின் மறக் கருணையின் வடிவமாகத் தோற்றுவிக்கப்பட்ட உக்கிர அருள் வடிவமே வீரபத்திரப் பெருமான்.

செருக்குக்கொண்ட தக்கனின் யாகத்தை அழித்துச் சிதைத்து அடிமைகொள்ளுமாறு சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திர மூர்த்தியை தோற்றுவித்து அருளியது புராண வரலாறு.

ஈழத்திருநாட்டில் புகழ்பெற்ற அருட்தலமாம் நல்லூரின் வடபுறத்தே அருட்செல்வர்களும், பொருட்செல்வர்களும் செறிந்து வாழும் கல்வியங்காட்டு திருப்பதியிலே கறுப்பையா வளவில் கோவில் கொண்ட எம் பெருமானது ஆலயம் காலத்தால் பழமையானது.

1966 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் கவனிப்பாரற்ற நிலையில் ஆடு -மாடுகள் உறங்குமிடமாக இருந்த இந்த ஆலயம் கந்தையா சண்முகலிங்கத்தின் பெருமுயற்சியால் புதுமெருகு பெற்று 1966 ஆம் ஆண்டு பராபவ வருடம் சித்திரைமாத திரயோதசி திதியில் நயினை கைலாயநாதகுருக்களின் நல்லாசியுடன் குடமுழுக்குச் செய்து வைக்கப்பட்டது.

1975 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஆலய பரிபாலனசபை ஒன்று தெரிவு செய்யப்பெற்ற சிறிது காலத்திற்குள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பத்திரகாளி, ஆறுமுகசுவாமி ஆலயங்களும் மகா மண்டபம், யாகமண்டபம் ஆகியனவும் அமைக்கப்பெற்றன.

1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5 ஆம் நாள் புதன்கிழமை குடமுழுக்குச் செய்யவும், பத்திரகாளி பிரதிஷ்டைசெய்யவும் திருவருள் பாலிக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29 ஆம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று தற்பொழுது புதுப் பொலிவுடன் விளங்கும் இவ்வாலயம் உள்ளூர் அடியார்களினதும் வெளிநாடுகளில் வாழும் வீரபத்திர அன்பர்களினதும் நிதியுதவியுடன் மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டதுடன் விநாயகர், கௌரி அம்பாள் சந்தானகோபாலர், சுப்பிரமணியர், சனீஸ்வரன், சண்டேஸ்வரர், துர்க்காதேவி, லிங்கோற்பவர், தட்சணாமூர்த்தி, சூரியன், சந்திரன், பைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளும் அமைக்கப்பட்டு 1990 ஆம் ஆனித் திங்கள் 3 ஆம் நாள் குடமுழுக்குச் செய்யப்பட்டது.

இன்றைய தினம் புனர்பூச நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் சேர்ந்த நல்லோரையில் காலை 6.30 மணி முதல் 7.50 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீவீரபத்திரப் பெருமானுக்கும், விநாயகர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறவுள்ள கிரியா கால வைபவங்களிலும் மங்கள தரிசனத்திலும் கலந்து சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்யுமாறு பக்தர்களை கேட்டுக்கொள்கிறோம்.

பரிபாலன சபை

## கிராமப்புறப் பாதைகளை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கிராமப்புற பாதைகளைத் துரிதமாக புனரமைப்புச் செய்வதற்காக மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலா 15 இலட்சம் ரூபா வழங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக நிதி தேவைப்படும் பட்சத்தில் அது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென பிரதமர் அறிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்த பிரதமர், இது தொடர்பாக அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய தீர்வு வழங்குவதாகவும் கூறினார். (க-7)

## சமநிலையில் முடிவடைந்த 'வடக்கின் மாபெரும் போர்'

(யாழ்ப்பாணம்)

'வடக்கின் மாபெரும்போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும், சென்.ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 99 ஆவது போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இப்போட்டில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணியினர் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 248 ஓட்டங்களையும், 2 ஆவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 138 ஓட்டங்களையும் பெற்றனர்.

மத்திய கல்லூரி அணியினர் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 156 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் போட்டியின் இறுதிவரை துடுப்பெடுத்தாடி ஏழுவிக்கெற்றுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர். (4)

## கட்டடப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வரிவிலக்கு அளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான கட்டடப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜ தெரிவித்திருக்கிறார்.

இந்த வரிவிலக்கின்படி தற்காலிக, மற்றும் நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் கட்டடப் பொருட்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் நான்காயிரம் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஆணையாளர் பாடசாலைகள், பொதுமண்டபங்கள், மற்றும் தற்காலிக கூடாரங்களில் தங்கியிருந்தவர்கள் தற்போது இத் தற்காலிக குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள்.

ஜனாதிபதியின் விசேட செயலணிக் கண்காணிப்பின்கீழ் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம், இடம்பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச அமைப்பு மற்றும் சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# ஏழைகளின் வாழ்வுக்கு ஆலயங்களின் பங்களிப்பு அவசியம் தேவை

## பவளவிழாக் காணும் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் செவ்வி



யாழ். குடாநாட்டிலிருந்தவண்ணம் இலங்கை முழுவதிலும் சைவ சமயப்பணி ஆற்றிவரும் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமிக்குப் பவள விழா நடக்கவிருப்பதை அறிந்து அவருடன் கலந்துரையாடச் சென்றிருந்த வேளை சைவப்புலவர் வ.கந்தசாமி சைவபரிபாலனசபை மூலம் ஆற்றிய பணிகள் மற்றும் பணிகளை நிறைவு செய்துகொண்டு வெளிநாட்டில் குடிய மரவிருப்பதை அறிந்தேன்.

இலைமறை காயாக இருந்து இறைபணி ஆற்றிவரும் கந்தசாமியின் செயற்பாடுகளை இச்செவ்வி ஓரளவுக்கேனும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் என எதிர்பார்க்கிறேன்.

**_கேள்வி._ வணக்கம்! தங்களைத் தமிழ் அறிஞராக, சைவப்புலவராக முன்னிறுத்தி உரையாடலை தொடங்கலாமென நினைக்கிறேன்.**

_பதில்._ நன்றி

**_கேள்வி:_ இளவயதிலிருந்து சைவ சமயப் பணிகள் செய்யவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதா? அல்லது வயது வந்ததன் பின்தான் ஏற்பட்டதா?**

_பதில்:_ நான் பிறந்த ஊரில் கந்தவனக் கடவை கந்தசாமி கோயில் இருக்கிறது. அக்கோவிலில் ஒரு பெரியார் அதிகாலை நேரத்தில் ஆலய மண்டபத்தைச் சுத்தம்செய்வார். இவரிடமே ஆரம்பத்தில் சமயம், தமிழ் ஆகிய பாடங்களைப் படிப்பதற்குத் தந்தயார் என்னைச் சேர்த்துவிட்டார். இந்தச் சைவப் பெரியாருடைய சைவத் தொண்டையே நானும் செய்யவேண்டும் என்ற ஊக்கம் உருவானது. அதனைத்தொடர்ந்து எனது ஊரிலுள்ள பிள்ளையார் கோவில், அம்மன் கோவில்களில எனது பணிகளைச் செய்தேன். இதனைத்தொடர்ந்து கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையா புராணம் என்பவற்றைப் புராணபடலத்தின்போது வாசிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

1948ஆம் ஆண்டு நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் எஸ்.எஸ்.ஸி படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. இதே வித்தியாலயத்தில் படித்து அத்தேர்வில் சித்தியடைந்தேன். 1950 ஆம் ஆண்டில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தொண்டராசிரியராகப் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்பாடசாலையின் முகாமையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க சமயப் பணிகளைச் செய்தேன் இதனை நேரில் அவதானித்த முகாமையாளர் 1953இல் இப்பாடசாலையிலே ஆசிரியராக நியமனம் தந்தார். இதனால் எனது தமிழ் அறிவும், சமய அறிவும மேலும் வளர்ச்சியடைந்தது. இளமையிலே நல்ல சூழல் அமைந்ததாலே சமயப்பணியில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது.

**_கேள்வி:_ சைவபரிபாலன சபையில் நீங்கள் இணைந்தபின் உங்கள் சைவப் பணிகள எப்படி வளர்ந்தன?**

_பதில்:_ அமரர் சமயப் பிரசார அமைச்சர் முமயில்வாகனம் அவர்கள் வேண்டுகோட்படி சைவபரிபாலன சபையில் என் பணி ஆரம்பிக்க வாய்ப்புக்கிட்டியது.

இச்சபையினரால் நடத்தப்பட்ட திருவாசக மனனப்போட்டி, திருமுறை மனனப்போட்டி என்பவற்றில் பங்குபற்றிப் பரிசில்களும் பெற்றேன். அதன்பின் சபையில் சாதாரண உறுப்பினராகி நிர்வாகசபை உறுப்பினராகியதால் எனது கடமைகளை மேலும் சிறப்பாகச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. மாணவர்களிடையே சைவசமயத் தேர்வை நடத்தவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இதன் காரணமாக 1978ஆம் ஆண்டில் தேர்வுச் செயலாளராகத் தெரிவுசெயயபபட்டேன். அதனைத்தொடர்ந்து பண்ணிசைப் போட்டி, கட்டுரைப்போட்டி என்பவற்றோடு சைவசித்தபண்டிதர் தேர்வுகளையும் நடாத்தும் பொறுப்புக் கிடைத்தது.

சபையின் சார்பாகத் திருமுறை வகுப்பு, சிதந்தாந்த வகுப்பு, புராண படல வகுப்பு என்பவற்றையும் நடத்த முயற்சி செய்தேன். முக்கியமாக கிறிஸ்தவ பாடசாலைகளில் கற்கும் சைவ மாணவர்களும் தேர்வுக்குத் தோற்றுவதற்கு வசதிகள் செய்துகொடுத்தேன். இன்று இச்சபை சைவ முன்பள்ளி, அறநெறிப் பாடசாலை, திருமுறை வகுப்பு ஆகியன நடைபெற உதவுகிறது. முதலாம் சைவ வினாவிடை, நாவலர் பாலபாடம் என்பவற்றை மீள அச்சிட முயற்சித்தேன. சைவசமய மகாநாடுகளை நடத்துவ தற்கு முயற்சிசெய்தேன.

மேலும் சைவபரிபாலனசபையின் உபதலைவர், தலைவர் பதவிகளில் கடமையாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது.

**_கேள்வி:_ கந்தவனக் கடவையில் பிறந்து கந்தர்மடத்தில் இணைந்து வாழ்ந்த நீங்கள் எவ்வாறு நாவலர் பெருமைகளைப் பரவச்செய்தீர்கள்?**

_பதில்:_ ஆறுமுகநாவலர் குருபூசை சார்பாக பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தியும் நாவலர் பெருமானின் நூல்களைச் சைவ அன்பர்கள் கற்கவும் ஒழுங்குசெய்துள்ளேன்.

**_கேள்வி:_ ஆசாரசீலராய் அமைதியுடன் பல ஆலயங்களின் நிர்வாகங்களில் இணைந்து செயற்படுகிறீர்கள். இதுபற்றிக் கூறுவீர்களா?**

_பதில்:_ மனித வாழ்க்கையில் அமைதியான இடத்தைத் தருவது ஆலயவழிபாடு. "நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி" என்ற கண்ணதாசனின் கருத்தினையும் சிந்தித்துள்ளேன. ஆலயத்தில் நடைபெறும் கிரியை முறைகள் எமது வாழ்க்கையோடு இணைந்திருப்பதை மக்களுக்குச் சுட்டிக் காட்டி விளக்கம் அளித்தேன். அறிவு வளர்ந்துகொண்டுவரும் இக்காலகட்டத்தில் அருளும் இணைந்து வளர வேண்டும். அன்பு வாழ்வு மிக அவசியம் என்பதை மக்களுக்கு ஆலயத்தின் மூலம் பெற்றுக்கொள்ள வசதி செய்தேன். இதேவேளை ஆலய நிர்வாகிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற உண்மையைக் கூறியுள்ளேன.

**_கேள்வி:_ கோயில்கள் மூலம் சமயப் பற்றை வளர்க்கலாம் என்று கருதும் நீங்கள் ஏழைச் சைவர்களின் வாழக்கைநிலையை உயர்த்த எவ்வகையில் உதவலாமெனக் கருதுகிறீர்கள்?**

_பதில்:_ ஒரு மனிதன் சமுதாயத்தில் மதிக்கப்படவேண்டுமானால் அவனது அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படவேண்டும். எமது சைவ சமயத்தில் உள்ள வசதிகுறைந்த மக்கள் பிறமதங்களை நாடி ஓடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களின் தேவைகளில் ஒரு சிறிதளவாவது நம்மால் நிறைவேற்றப்படாமையே.

ஆலய நிர்வாகி ஆலயத்தினூடாக ஏழைமக்களின் வாழ்வுக்கு உதவவேண்டும். மேடைப்பேச்சால் பயனில்லை. ஆலயத்தில் அவசியமற்ற தேவைகளைச் சுருக்கி மக்கள் வாழ்வு சிறப்புற சேவைகளை ஆற்ற வேண்டும்.

**_கேள்வி:_ பண் முறித்து சில கோயில்களில் திருமுறைகள் பாடுகிறார்களே. இதன் தாக்கம் எப்படி அமையும்?**

_பதில்:_ திருமுறைகளை பொருளறிந்து பண்முறைப்படி பாடப்படவேண்டும். அப்பொழுதுதான் கடவுளின் திருவருட் சிறப்பு அப்பாடலில் காணப்படும் தன்மையை உணரமுடிகிறது. தேவாரப பதிகங்களை நாயன்மார்கள் எந்நிலையில் நின்றுபாடினார்கள் என்பதனை மக்கள் உணரவேண்டும். பொருள் தெரியவேண்டும். "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும்" என மணிவாசகரே கூறியுள்ளார்.

**செவ்வி கண்டவர்: சு. துரைசிங்கம்**

**_கேள்வி:_ பவளவிழாக் காணும் இந்நாள் வரை உங்களுக்குக் கிடைத்த கௌரவங்கள் பற்றி அறியலாமா?**

_பதில்:_ என்னை அறிந்த அன்புள்ளங்கள் அதாவது சபைகள் 'சைவநெறிக் காவலர், சிவநெறிச் செம்மல், சிவநெறிக் கலாநிதி, சைவபூஷணம், சித்தாந்த வித்தகர், சமூகதீபம்' ஆகிய பட்டங்களைத் தந்து கௌரவித்தன.

**_கேள்வி:_ இற்றைவரை நீங்கள் சாதிக்க நினைத்துக் கைகூடாதமை பற்றியும் குறிப்பிட முடியுமா?**

_பதில்:_ போதனையின் பயன் சாதனைப்படுத்தல் சாதனைப்படுத்தும் நிலைப்பாடு குறைவுபெறுகிறது.

**_கேள்வி:_ இன்றைய சைவ இளைஞர்கள் மத்தியில் சமய நம்பிக்கை கூடியிருக்கிறதா? குறைந்திருக்கிறதா?**

_பதில்:_ இளைஞர்கள் மத்தியில் சமய அறிவு பெறவேண்டும் என்ற ஆசை கூடி வருகின்றது. அந்த ஆர்வத்திற்கேற்ப அவர்களை அணைத்து நெறிப்படுத்தப் பண்பான குருமார்கள தேவை. இன்றைய இளைஞர்கள் எமது சமய சடங்குகள் என்ன பயன் தருகின்றது என்று அறிய ஆவலாக இருக்கிறார்கள். அவாகள் உண்மையான தத்துவங்களை அறிய விரும்புகிறார்கள். சமயக் கல்வி அறிவு, விஞ்ஞானக் கல்வி அறிவோடு பண்ணிப் பிணைந்து இருக்கவேண்டும்.

**_கேள்வி:_ சைவசமயம் ஒரு வாழ்க்கைமுறை என்று சொல்வது எவ்வளவுதூரம் பொருந்தும். இதுபற்றி விளக்குவீர்களா?**

_பதில்:_ ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளுக்கு ஒழுங்கு உண்டு. அபிஷேகம், அலங்காரம், தீபம், தூபம் நைவேத்திய ஒழுங்குமுறையை கிரியை ஒழுங்குமுறையோடு ஒப்பீடு செய்ய வேண்டும்.

**_கேளவி:_ பவளவிழா வயதுடன் ஈழத்தில் சைவப்பணியை நிறைவு செய்து கொண்டு வெளிநாட்டில் குடியமர இருக்கும் கந்தசாமி ஐயா, வலம்புரி பற்றிய தங்கள் கருத்து யாது?**

_பதில்:_ பத்திரிகைகள் நாட்டின் வளதுக்கு பெரிதும் உதவுகின்றன. அநத வகையில் வலம்புரிப் பத்திரிகை தமது பெயருக்கு ஏற்ப மக்களின் அடிப்படைத்தேவைகளை மக்களுககுக் காலத்துக்குக் காலம் கூறிவருகிறது. சமய அறிவுரைகளை, இதிகாசத்தின் தேவைகளை, விஞ்ஞான விளக்க அறிவுகளை சகலரும் அறிந்து கொள்ளக் கூடிய முறையில் திட்டமிட்டு வலமபுரி தாங்கி வெளிவருவது சாலச்சிறநதது. இன்றைய மக்கள் சமுதாயத்திற்குத தேவையான கருத்துக்களை உய்த்துணரவைக்கும் வலம்புரியின் சேவைகளை மறக்கமுடியாது.

## புலிகள் — கூட்டமைப்பு சந்திப்பு — விரைவில்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையே விஷேட கூட்டமொன்று விரைவில நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக இக்கூட்டத்தில் விஷேடமாக ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## எரிவாயுவின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவிற்கான விலையை ஐந்து ரூபாவால் அதிகரிப்பதற்குப் பாவனையாளர் பாதுகாப்புச்சபை அனுமதி அளித்திருக்கிறது.

இதற்கமைய ஷெல் எரிவாயுவின் விலை 780 ரூபாவிலிருந்து 785 ரூபாவாக விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக ஷெல் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. (க-7)

## சர்வமதக்குழு மன்னாருக்கு விஜயம்

தெற்கிலிருந்து சர்வமதக் குழுவொன்று நேற்றுமுன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்துள்ளது.

நான்கு மதங்களையும் சேர்ந்த 15 குருமார் உட்பட 55 பேர் இக்குழுவில் அடங்குகின்றனர். நான்கு நாட்கள் மன்னாரில் தங்கியிருக்கும் இக்குழுவினர், அங்கு பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர்.

இவர்களின் விஜயத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வாழ்வோதய மன்றம் செய்துள்ளது. (க-7)

## போதை கலந்த ரொபி சிறுவர்களே கவனம்!

(கண்டி)

நான்காம் வகுப்பில் கல்வி பயிலும மாணவர்கள் சிலருக்குப் போதைப் பொருள் வழங்கியதாகச் சந்தேகிக்கப் படும் மூவரை தடுப்புக்காவலில் வைக குமாறு கண்டி பிரதம மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

கண்டி பேராதனை வீதியிலுள்ள ஒரு பிரபல பாடசாலை மாணவர்கள10 பேருக்குப் போதை தலைக்கேறியதால் மயக்கமுற்ற நிலையில் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பேராதனைப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் பாடசாலை முன் பெட்டிக்கடை வைத்துள்ள ஒருவரையும, அவரது சகபாடிகளான வெளிநாட்டில் வேலைவாய்ப்பை முடித்துக் கொண்டு வந்துள்ள இருவரையும் கைது செய்து கண்டி பிரதம மாஜிஸதிரேட் ஹர்ஷ சேதுங்க முன் ஆஜர்செய்தனர்.

போதைகலந்த ரொபி விற்பனை செய்த குற்றத்துக்காக இவர்களை தடுப்புக்காவலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். (க-9)

## கொழும்பு பல்கலையில் புதிய கற்கை நெறிகள் அறிமுகம்

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பௌதீகவிஞ்ஞானபீடம் இரண்டு புதிய விஞ்ஞானக் கற்கைநெறிகளை அறிமுகம செய்யவிருக்கின்றது.

பிரயோக இலத்திரனியல் தொழில்நுட்பம், இடிமின்னலுக்கெதிரான தடுபபுத் தொழில்நுட்பம் ஆகியவை தொடர்பானவையே இப்புதிய கற்கைநெறிகளாகும்.

போட்டோ பிரதி எடுத்தல், சலவை இயந்திரம், கணனித்தொழில் நுடபம் ஆகிய துறைகளில் நிறைந்த அறிவைக கொண்ட தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்குவதே முதலாவது கற்கைநெறியின் நோக்கமாகும்.

மற்றையது இடி மின்னல் ஏற்படும வேளைகளில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் தொடர்பான அறிவை வழங்குவதாகும். (க-7)


**நீங்கள் கனடா செல்ல விரும்புகின்றீர்களா?**
**நீங்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களா?**

- கனடாவில் ஸ்பொன்சர் (Sponser) வசதிகள் இருப்பவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

*மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பும், ஆலோசனைகளும்*

- ஓமான், டுபாய், டோகா, சவுதிஅரேபியா, பாரின்ஸ் ஆகிய நாடுகளில் பின்வரும் வேலைகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலைவாய்ப்பு
  மேசன், தச்சுத் தொழில் (SHUTTERING), இரும்பு வேலை (STEEL FIXER), அலுமினியப் பிற்றிங், எலக்ற்றிசியன், A/C Technicians, சாரதிகள்.
- இங்கிருந்துகொண்டே ஒரு PASSPORT ஐ பெறுவதற்குரிய ஆவண ஒழுங்குகள், PASSPORT இல் பிள்ளைகளை இணைத்தல், பெயர் மாற்றம் புதுப்பித்தல், அடையாளம் அடையாள அட்டைகளை இணைத்துகொள்ளல் ஆகியவற்றுக்கும்,
- ஸபொன்சர் (Sponser) மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்குரிய (கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்) VISA ஒழுங்குகள், ஆலோசனைகள் எம்மால் செய்துகொடுக்கப்படும்.

*தொடர்புகளுக்கு:*

**RAINBOW TRAVELS & TOURS**

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)
தொலைபேசி: 222 3918, 0777 328219

*குறிப்பு: எமது ஸ்தாபனம் கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.*

# மீள் குடியமர்விற்கு தடையாக இருப்பதால்தான் படையினரை ஆக்கிரமிப்பாளராக கருதுகிறோம்

# வலி. வடக்கு மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்!

**மனிதநேயமும் விட்டுக்கொடுப்புமில்லாத வெறித்தனமான ஸ்ரீலங்கா பேரினவாதமானது எம்மீது போரினை திணித்துள்ளது. அதன் விளைவாகவே நாம் எமது வாழ்விடங்களில் இருந்து படைகளால் துரத்தப்பட்டுள்ளோம். எமது வாழ்வில் இடம்பெயர்வு எனும் மனித அவலம் தொடர்கதையாகிவிட்டது.**

இவ்வாறு வலிவடக்கு பொது அமைப்புகள் ஒன்றியத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கையளிக்கப்பட்ட இம் மகஜரில் மேலும குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

நாம் தொழில் புரிந்த கடலை, எமது விளைநிலங்ளை, குடியிருப்புகளை, பாடசாலைகளை, தேவாலயங்களை, தொழிற்சாலைகளை உயர்பாதுகாப்பு வலயங்கள் விழுங்கிவிட்டன எனவேதான், இராணுவத்தினரை ஸ்ரீலங்காப்படைகளை ஆக்கிரமிப்புப் படைகளாகக் கணிக்கின்றோம்.

போர் நிறுத்த உடன்படிக்கை கடந்த 03 வருடங்களாக அமுலிலிருந்தும் இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்றன. சமாதான முன்னெடுப்புகள் நடைதளர்ந்து ஸ்தம்பிதம் அடைந்துவிட்டன. சமாதானத்தின் மீதான நம்பிக்கை சரிந்து வருகிறது. உண்மையிலே சமாதானத்தை உருவாக்குவதில் தாங்கள் அக்கறை கொண்டிருந்தால்,

இடம் பெயர்ந்தோர் தமது பிரதேசங்களில் மீள்குடியேறுதல், இயல்பு வாழ்நிலைக்கு திரும்புதல்,

தமிழ்மக்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதோடு மேம்பாடுகாண பொருத்தமான அரசியல், சமூக பொருளாதார முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் துணிச்சலான இதய சுத்தியுடனான அணுகுமுறையை மேற்கொள்ளுதல்.

என்பன தங்களது அரசியல் நிகழ்ச்சிநிரலில் இடம்பெற வேண்டும். இவற்றைத் திட்டமிடுவதற்கும், அமுல்படுத்துவதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் பொருத்தமான நடைமுறைச் சாத்தியத்துடனான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர்.

ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கை அரசியலோ தமிழின அழிப்பைக் குறிக்கோளாகக் கொண்டமையால் அவர்களது முன்மொழிவுகள் இழுத்தடிக்கப்படுகின்றன, அல்லது புறக்கணிக்கப்படுகின்றன.

தாங்களும் பேரினவாதச் செயற்பாடுகளுக்குத் துணைபோவதுடன் முனைப்பாகச் செயற்படுவது எமக்குப் பெரும் வேதனையை அளிக்கின்றது.

எமது இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுவே நிரந்தர நீடித்த சமாதானத்திற்கான ஒரே வழிப்பாதையாகும். போரினால் மட்டுமன்றி அண்மைய சுனாமி பேரலையினாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது அபிலாஷைகள் புறம்தள்ளப்படுமாயின் எமக்கு முன்னேயுள்ள தவிர்க்க முடியாத தெரிவாகிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், எமக்கென்று ஒரு தேசத்தை உருவாக்கும் வல்லமையை பலவழிகளிலும் கொண்டுள்ள நாம் அப்பாதையிலே தொடர்ந்து செல்வோம் என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதில் பெருமை கொள்கிறோம என்று அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-43,9)

## யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் போதிய வைத்திய நிபுணர்களும், வைத்தியர்களும் இல்லாதிருப்பதன் காரணமாக வைத்தியசாலையை நாடிவரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான வைத்திய சேவையை வழங்க முடியாமல் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் மொத்தமாக 100 வைத்தியர்கள் பணிசெய்யவேண்டிய நிலையில் தற்போது ஒன்பது வைத்தியர்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்த வைத்தியசாலையில் மிக நீண்டகாலமாக நிலவி வரும் வைத்தியர்கள், வைத்தியநிபுணர்கள், தாதிகள் மற்றும் ஏனைய தரங்களிலான ஊழியர்களுக்கான தட்டுப்பாடுகளை நீக்கும் படி பல சிவில் அமைப்புக்கள், அரசுக்கும், சுகாதார அமைச்சுக்கும் பல தடவைகள் கோரிக்கைகள் விட்டிருந்த போதிலும் கூட, இதுவரை அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலே இருந்துவருகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, சங்கானை, மருதஙகேணி, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை போன்ற அரசினர் வைத்தியசாலைகளில் இன்னமும் மீள் நியமனத்தில் உள்ளீர்க்கப்பட்ட வைத்தியர்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, விசேடத்துவமிக்க சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல நோயாளர்கள் கொழும்பு, கண்டி மற்றும் சென்னை போன்ற இடங்களில் இயங்குகின்ற அதி நவீனத்துவமிக்க வைத்திய மனைகளை நாடிச் செல்வதாகவும் தெரியவருகின்றது. (ற-16)

## இராசி பலன்

**20.03.2005 பங்குனி 07, ஞாயிற்றுக்கிழமை**

**புநர்பூசம் பி.இரவு 02.31 மணிவரை**

**தசமி முன்இரவு. 8.16 மணிவரை**

**இராகுகாலம் 04.17 - 5.47 மணிவரை**

**சுபநேரம் 9.17 - 10.47 மணிவரை**

**சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, புதிய விடயம், மனச் சஞ்சலம், காரிய தாமதம். |
| இடபம் | பிரயாண நன்மை, சகோதரர் உதவி, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | சிந்தை மிகுதி, காரிய தாமதம், பண விரயம், அதிக வார்த்தை. |
| கடகம் | பிரயாணம், போசன சுகம், தெய்வ சிந்தை, அந்நியர் சந்திப்பு. |
| சிங்கம் | தொழில் நன்மை, பிரயாண நன்மை, செலவு அதிகம், மாதர் நட்பு. |
| கன்னி | தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், நல்ல வருமானம், புகழ். |
| துலாம் | தொழில் சிந்தை, உற்சாகம், அதிக வார்த்தை, அதிகாரம். |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, காரிய தாமதம், கட்டுப்பாடு, உற்சாகம். |
| தனுசு | அதிக செலவு, கடின வார்த்தை, நீண்ட பயணம், பொறுமை. |
| மகரம் | தெய்வ தரிசனம், கடன் மிகுதி, அபகீர்த்தி, தொழில் விருத்தி. |
| கும்பம் | ஆரோக்கிய நிலை, சத்துரு ஜெயம், அந்நியர் சந்திப்பு. |
| மீனம் | மனச் சஞ்சலம், புத்திரரால் கவலை, காரிய தாமதம், சொத்து பிணக்கு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

—வளவன்

## புனித வார வழிபாடு

. குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும், புதுமை மாதா ஆலயத்திலும் புனித வார வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. அந்த வகையில் இன்று குருத்தோலை ஞாயிறு தினததையொட்டி காலை 5.45 ற்கும், 7.30 ற்கும புனித யாகப்பர் ஆலயத்திலும் மாலை 5 மணிக்கு புதுமை மாதா ஆலயத்திலும விசேட திருப்பலிப் பு,சைகள் நடைபெறவுள்ளன. (ற-7)

## உள்ளூராட்சி மன்ற கட்டடங்களை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு சேத மடைந்த உளளூராட்சி மன்றக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வற்கு உளளூராட்சி மாகாண சபைகள அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

மேலும் இந்த நடவடிக்கைக்காக சுமார் 370 மில்லியன் நிதி ஒதுக்கடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

சுனாமி தாக்கத்தினால் வடக்கு- கிழக்கு மாகாணம உட்பட நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் அமைந்திருந்த 4 மாநகர சபைகள், 8 நகர சபைகள் மற்றும் 28 பிரதேச சபைகள் என்பனவற்றின அலுவலகக் கட்டடஙகளுக்கும் மற்றும் வாகனஙகள், சொததுக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் அருகில் உள்ளதற்காலிக கட்டடங்களில் இயங்குகின்றன.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் கவனததுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன், சேதமடைந்த உளளூராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (க-9)

### பாதிப்புற்ற பிரதேசங்களில் பணியாற்றும்

## பிரதேச செயலக ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கவேண்டும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பணியாற்றும் பிரதேச செயலக ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்றும், தமது வேலை நேரங்களுக்கும் மேலதிகமாக கடமையாற்றும் இவர்களை இவ்வாறான கொடுப்பனவுகள் மூலம் உற்சாகப்படுத்துவதால் மீட்பு நிவாரண வேலைகளைத் துரிதமாக்க முடியுமென்றும் தகவல் ஊடகத்துறை பிரதி அமைசசர் எம்.எச்.சேகு இஸதீன தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களான சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் தமது வேலை நேரங்களிலும் பார்க்க கூடுதலான நேரம் வேலை செய்கின்றனர்.

அகதிகள் பராமரிப்பு, இருப்பிடங்கள் வழங்கல், பாதிக்கப்பட்டோருக்கான கூப்பன்களை வழங்கல், பிறப்பு இறப்பு சான்றிதழ்களை புதிதாக வழங்கல் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களைத் திரட்டவென சதா உழைத்துக் கொண்டிருககின்றனர்.

எனவே இவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன் விடுமுறைக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும் என்று பிரதியமைச்சா சேகு இஸதீன் வேணடுகோள் விடுத்துள்ளார்.

இருபது மணித்தியாலமாகவுள்ள இவர்களது மேலதிக நேரக் கொடுப்பனவை நூறு மணிததியாலமாக உயர்த்தவேண்டுமென்றும் பிரதமர் பிரதான அமைச்சர்கள் ஆகியோர்களிடம் பிரதியமைச்சர் சேகு இஸதீன கோரிக்கை விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ள பகுதிகளில் தமது சொந்தவேலைகளைப் புறந்தள்ளிவிட்டு முழுமூச்சாக உழைத்துக் கொண்டிருக்கும் இவ்வூழியர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் இப் பிரதேசங்களில் தேங்கிப் போயுள்ள புனரமைப்பு நிவாரண வேலைகளைத் துரிதமாக்க முடியுமென்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க-9)

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விளையாட்டு அவை உறுப்பினர்களுக்கான அவசர கூட்டமொன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு பல்கலைக்கழக உடற் கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு அவைக்கான குழுப் புகைப்படமும் அன்றைய தினம் எடுக்கப்படவுள்ளதால் 2004ஆம் ஆண்டுக்குரிய சகல உறுப்பினர்களையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு உடற்கல்வி அலகின் இணைப்பாளர் மா.இளம்பிறையன் கேட்டுள்ளார். (ற)

## மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

சுகவாழ்வு நிலையத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மகளிர் தினம் நடாத்தப்படவுள்ளதால் அனைத்து ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு சுகவாழ்வு நிலையத்தின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (ற)

# ஐயங்கள் ஆயிரம்

## ஈர்ப்பு விசை

புவிக்கு ஈர்ப்பு விசை அதனைச் சுற்றி எவ்வளவு தூரத்துக்கு இருக்கும்? அதற்கப்பால் காற்று உள்ளதா? அங்கு ஒரு பொருளைப் போட்டால் அதன் நிலை என்ன? போன்ற சந்தேகங்கள் பல நம்மிடையே உள்ளது.

காற்று மண்டலம், புவி ஈர்ப்பு இந்த இரண்டும் வேறு வேறாகப் பார்க்கவேண்டியவை.

ஒரு பல்பு எரிகிறது. அதன் ஒளி சுற்றிலும் பரவுகிறது. பல்பை விட்டுத் தள்ளிப் போகப் போக அதன் வெளிச்சம் குறைகிறது. ஒரு கோட்டுக்கு அப்பால் அதன் ஒளி நின்றுவிடும என்று சொல்லமுடியுமா?

ஒளி முடிவில்லாமல பரவிக்கொண்டே தான் இருக்கும். அதுபோலவே சூரியன், சந்திரன், பூமி ஆகிய சகல உருப்படிகளின் ஈர்ப்பு விசையும் நாலாபக்கமும் விரிந்து பரவியபடியே இருக்கும். அதற்கு எல்லை இல்லை. ஒரு பொருளைவிட்டு விலகிச் செல்லச செல்ல இன்னொரு பொருளை நெருங்கிவிடுவதால் அதன் ஈர்ப்புக்கு அதிகம் உள்ளாக்கப்படுகிறோம். அதனால் அங்கே முந்தைய பொருளின் ஈர்ப்பு இல்லாதது போல ஒரு உணர்வு ஏற்படுகிறது. பூமியின் ஈர்ப்புக்கு உட்பட்டதால்தான் கடல்நீர் பூமியில் வழியாமல் ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அவ்வாறே காற்றும் மெல்லிய படலம் போல பூமியின் மீது போர்த்தியபடி உள்ளது. காற்றைவிட்டு மேலே சென்றுவிட்ட போதிலும பூமியின் ஈர்ப்புக்குள்தான் நாம் இருக்கவேண்டி வரும். காற்று மண்டலம் 100 கிலோ மீற்றருக்கு அப்பால் மறைந்துவிடுகிறது. பூமியின் ஈர்ப்பு விசையோ அண்டத்தின் இறுதிவரை வியாபித்துள்ளது.

### சவரன் என்பது சுத்தத் தங்கமா?

இல்லை. சவரனின் 91 2/3 பாகம் தங்கமும் 81/3 பாகம் செம்பும் சேர்ந்திருக்கிறது. இதனைத்தான் சவரன் எனறு சொலக்றார்கள். சுத்தத் தங்கம் மிருதுவாக இருக்குமாதலால் அத்துடன் செம்பு கலவாமல் எந்த ஆபரணமும் செய்யமுடியாது.

# கடல் நுரையில் தனிமங்கள்



வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப உலகில் அனைத்துப் பொருட்களுமே தீவிரமான ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்தகைய பொருட்களில் தற்போது கடல் நுரையும் சேர்ந்துள்ளது. கடல்வாழ் உயிரினங்களை ஆய்வுசெய்யும் விஞ்ஞானிகள் தற்போது கடல் நுரை குறித்து தீவிர ஆய்வுகளை மேறகொண்டு வருகின்றனர்.

கடல் நுரையிலிருந்து அரிய தனிமங்களைப் பிரித்தெடுக்க முடியுமா? என்பது குறித்து ஜப்பானில் தீவிர ஆய்வுகள் நடைபெறுகின்றன. கடல் நுரையில் ஏராளமான தனிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடலில் காணப்படும் நீரைவிட கடல் நுரையில் இந்தத் தனிமங்கள் அதிகளவில் இருபபதற்கான காரணம் விஞ்ஞானிகளுக்கே புரியாத புதிராக உள்ளது. கடல் நீரில் உள்ளதைவிட கடல்நுரையில் இருமபுச்சத்து 75 ஆயிரம் மடங்கு அதிகமுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் நுரை கொள்ளளவில் 65 முதல் 75 சதவீதம் வரை சாம்பல் உள்ளது. ஒரு கிராம் உலர்ந்த நுரைத் தூளில் இரும்பைத் தவிர தாமிரம், மங்கனிஸ், பொஸ்பேட், சிலிகேட், தைட்ரேட் போன்றவை உள்ளன. நடுக்கடலில் பெருங்காற்று வீசும்போது நுரை உண்டாகிறது. பெருங்காற்றின்போது அலைகளின் சிகரம் உடைந்து காற்றை உள் வாங்குகிறது. இதனால் வெண்மைநிற நுரை உண்டாகிறது. இந்த வெண்நிற நுரையை உலர்த்துவதால் கிடைக்கும் தூளுக்கு வேதியியல் பயன்களைத் தவிர வேறு ஏதேனும் மருததுவப் பயன்கள் இருக்கிறதா? என்றும் ஆராயப்படுகிறது.

இரத்தச்சோகை உள்ளோருக்கு இந்தத் தூளில் இருந்து கிடைக்கும் மருந்தைப பயன்படுத்தமுடியுமா? என மருத்துவ விஞ்ஞானிகள் ஆய்வு செய்துவருகின்றனர். அப, மயாகே போன்ற விஞ்ஞானிகள் கடல் நுரையின் இயற்பியல் பண்புகளை ஆராய்ந்து கடல் நுரை ஆய்வுகளைத் தொடங்கிவைத்தனர். அவர்கள் தொடங்கிய இந்த ஆய்வு இன்று கடல் நுரையின் மருத்துவப் பயன்கள் என்ற புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

## கல்லீரல் புற்றுநோயைத் தடுக்க மரபணு மருந்து கண்டுபிடிப்பு

கல்லீரல் புற்றுநோயைத் தடுக்கக்கூடிய மரபணுவை ஹொங்ஹொங் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுதொடர்பாக 'சௌத் சீனா மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் வெளியான செய்தியின விபரம் வருமாறு,

ஆரோக்கியமான நிலையில் இருக்கும் அனைவரிடமும் கல்லீரலைப் பாதிக்கும் புற்றுநோய் செல்களைத் தாக்கக்கூடிய இந்த மரபணு இருக்கிறது. இது இல்லாமல் போகும் நிலையில்தான் ஒருவருக்குக் கல்லீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

இம் மரபணுவைப் பயன்படுத்திக் கல்லீரல் புற்றுநோய்க்கு மருந்து தயாரிக்கலாம். தற்போது கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை, கதிரியக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கல்லீரல் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக புதிய மருந்தைப் பயனபடுத்தலாம். இம்மருந்து புற்றுநோய் செல்கள் இரட்டிப்பதைத் தடுப்பதுடன் பெருமளவில் அவற்றை அழிக்கிறது எனத் தெரிவிக்கபபட்டுள்ளது.

## பாலைவனத்தில் மீன் வளர்க்க முடியுமா?

பாலைவனத்தில் பயிர் வளர்வதே அரிது. மீன் வளர்ப்பது என்றால் நம்பத்தான முடியுமா? இந்தச் சாதனையை இஸ்ரேலில உள்ள சில மீன் பண்ணைகள் சாதித்துக் காட்டியுள்ளன.


இஸ்ரேலில் சினாய் பாலைவனப் பகுதிகளில் இசாக்லேவி என்பவரும் அவரது நண்பரும் இணைந்து பிளாஸ்டிக் ஷீட்டினால் செய்யப்பட்ட குளங்களை உருவாக்கி குளங்களில் செயற்கை முறையில் நல்ல காற்றோட்டம் செய்யப்பட்டு தண்ணீரை மீண்டும் சுத்தம் செய்து பயன்படுத்தும் சுழற்சிமுறையில் மீன்கள் பராமரிக்கப்படுகறது.

கணினி மூலம் மீனுக்குத் தேவையான வெப்பநிலை கட்டுப்படுத்தப்படுகிறது. குளங்களில 1 கனமீற்றருக்கு 5முதல் 8டன் மீன்கள் இக குளங்களில் உற்பத்தியாகின்றன.

இது மீன் உற்பத்தியில் உலக சாதனையாகும்.

வாழ்க்கை உங்களிடம் திரும்பத் திரும்ப ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. 'நீங்கள் வாழ்வதற்கு மீண்டும் தயாராக இருக்கிறீர்களா?'

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 51



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 51**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

..........................................................

இங்கே வெட்டுக ------------------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)அக்னி ஏவுகணையின் தந்தை என அழைக்கப்படுவர். (5) நெல் மணிகளின் தொகுதியை இப்படியுமழைப்பர் (குழம்பியுள்ளது). (8)தான் ஆடாவிட்டாலும் இது ஆடும் என்பார்கள் (திரும்பியுள்ளது). (9)நவ மணிகளில் ஒன்று. (12)ஒரு விவசாயத் தொழில். (13)மருத்துவக் குணமுள்ள செடிகளை இப்படிச் சொல்வார்கள் (திரும்பியுள்ளது).

## மேலிருந்து கீழ்

(1)செம்மெழுகால் செய்யப்பட்ட மன்னர்கால வீடுகளை இப்படிச் சொல்வார்கள். (2)பன்னிரு இராசிகளில் ஒன்று. (3)இது தேவையில்லை புத்தியைத் தீட்டினால் போதும் என்கிறார் கண்ணதாசன். (4)அழகான முகங்களை உடைய பெண்களை இப்படிச் சொல்வார்கள் (கீ.மே). (6)சவுக்கு - இப்படியுமழைப்பர். (7)விற்பனை அங்காடிகளை இப்படித்தான் அழைக்கிறார்கள் (கீ.மே). (10)முகத்தில் ஒரு உறுப்பு குழம்பியுள்ளது. (11)பயிர்களின் பாதுகாப்புக்காக இடப்படுவது இங்கே குழம்பியுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.49 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.சோனியாகாந்தி 4.பரு 6.காசி 7.கோழி 8.பலம் 9.படை 10.மதி 11.பாலை 12.சித்திரம்

### மேலிருந்து கீழ்

1.சோழன் 2.கார்காலம் 3.திருகோணமலை 5.பழி 6.பசி 8.பரதம் 11.பாசி

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | க.தவசீலன் மட்டுவில் வடக்கு, மீசாலை. |
| இரண்டாம் பரிசு | :- | M.சிந்துஜா புலோலி மத்தி, தம்பசிட்டி. |
| மூன்றாம் பரிசு | :- | ஆ.காயத்ரி 'மணிமண்டபம்' நவாலி வடக்கு, மானிப்பாய். |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

ஞா.இராஜோதயன், தெல்லிப்பளை. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. த.யோகராசா, சாவகச்சேரி. கே.ஏ.வரன், புத்தூர். இ.கிருஸ்ணாகினி, வண்ணார்பண்ணை. சி.இராசமணி, கொக்குவில். L.ஜெகன், யாழ்ப்பாணம். வி.செல்வநாயகம், புத்தூர். வே.சரண்ணியா, யாழ்ப்பாணம். வே.சுபாஷினி, மானிப்பாய். ம.மயூரன், முள்ளியவளை. இ.இளமதி, உடுவில். சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். வே.குமாரசுவாமி, கரவெட்டி.



# ஜீ
## திரை விமர்சனம்

அரசியல் கலந்த அக்ஷன படமாக வெளிவந்திருக்கிறது 'ஜீ'.

ரீக்கடை நடத்தும் விஜயகுமாரின் ஒரே மகன் வாசு. கல்லூரி மாணவன். பள்ளி மாணவி புவனா மீது அவனுக்குக் காதல ஏற்படுகிறது.

மாணவர் பேரவை தேர்தலில் தலைவர் பதவிக்கு வாசுவை நண்பர்கள் வற்புறுத்தி நிறுத்த எம்.எல்.ஏ வரதராஜனின் மகன் தான் ஜெயிக்க வேண்டுமென்பதற்காக வாசுவை வாபஸ்பெற மிரட்டுகிறான்.

எம்.எல்.ஏ.வே தலையிட்டு வாசுவைப் போட்டியில் இருந்து விலகவைத்து மகனை ஜெயிக்கவைக்கிறார்.

வெற்றி விழாவில் எம்.எல்.ஏ. மகனின் கோஷ்டி, வாசுவின் நண்பர்களை வம்புக்கு இழுக்க கல்லூரி கலவர களமாகிறது. காயம்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கும வாசுவை எம.எல.ஏ. மிரட்ட அவன் சூடாகிறான். சட்டசபைத் தேர்தலில் வரதராஜனை எதிர்த்து வாசு போட்டியிட திருப்பம் ஏற்படுகிறது.

அராஜகம், அடிதடி, கலவரத்தை மீறி வாசு ஜெயிக்கிறான்.

தோல்வியைத் தாங்கமாட்டாமல் அடியாட்களை ஏவி வன்முறை வெறியாட்டம் நடத்துகிறான் வரதராஜன். வாசுவின் தந்தையும், நண்பர்களும் குண்டுவீசி கொல்லப்படுகிறார்கள். வாசு மீது பொய் வழக்குப் போட்டு ஜெயிலுக்கு அனுப்புகிறான். இதனால் வாசுவின் எம்.எல்.ஏ. பதவி பறிபோகிறது.

தண்டனை முடிந்து வெளியேவரும் வாசுவுக்கு வெறி... மந்திரியாகிவிடும் வரதராஜனை அவன் பழிதீர்ப்பது கிளைமாக்ஸ.

வாசுவாக வரும் அஜித்துக்கு அழுத்தமான பாத்திரம். மாணவன், காதலன், நீக்கதியாகி வில்லன் கூட்டததை வேரறுக்கும் வெறியன் எனப் பல முகங்களில் வெளுத்துள்ளார்.



வாக்காளர் மனதில் இடம்பெற சேரியைச் சுத்தம் செய்வது... எரிந்த பஸ்சை பழுதுபார்த்து போக்குவரத்து இல்லாத ஊருக்கு பஸ்விடுவது... போன்ற காட்சிகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறார்.

நண்பர்களையும் தந்தையையும் கருகிய நிலையில் பிணமாகப் பார்த்து கதறுவது உருக்கம். தாடி வேடத்தில் வில்லனைப் பின் தொடரும் காட்சிகள் பரபரப்பானவை. ரெயில் பெட்டிக்குள் தீ வைத்து மந்திரியுடன் மோதுவது மிரட்டல். வசன உச்சரிப்பில் மெருகு.

பள்ளி மாணவி புவனாவாக வரும் த்ரிஷா மனதில் நிற்கிறார். அஜித், திரிஷா காதல், கவிதை...

எம்.எல்.ஏ வரதராஜன் பாத்திரத்தில் சரண்ராஜ் மிரட்டுகிறார்.

அஜித்தின் நண்பராக வெங்கட்பிரபு, தந்தையாக விஜயகுமார், சைக்கிள் கடைக்காரராக மணிவண்ணன் என ஒவ்வொரு பாத்திரமும் ஜீவன் நிறைந்தது.

எம்.எல்.ஏ. மகனாக வரும் பவன் இன்னொரு எரிச்சல் வில்லன். தேர்தல் ஊர்வலம், கலவரம், ரத்தம் என முழுக்க முழுக்க விறுவிறுப்பாக்கி உள்ளார்.

இயக்குனர் லிங்குசாமி வசனத்திலும் வித்தியாசமான காட்சித் திணிப்பிலும் பளிச்சிடுகிறார்.

வித்யாசாகர் இசையில் பாடல்கள் இனிமை.

ஜீ... மாணவர் அரசியல்.



கலிங்கா
பாலா-நந்தனா

# மோகன்லால் சிபாரிசு

கேரளாவில் நிரந்தரமாகத் தங்கியுள்ள மீனாவுக்கு தமிழ்ப் பட வாய்ப்புகளைவிட மலையாளப் பட வாய்ப்புகள் நிறையக் குவிகிறதாம். தன்னுடன் சேர்ந்து மீனா நடித்த படங்கள் எல்லாம் பெரிய வெற்றிபெற்றதால், மோகன்லால் மீனாவுக்கு சிபாரிசு செய்கிறாராம். சமீபத்தில் வந்த 'உதய நானு தாரம்' என்ற படம் கேரளாவில் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திரைக்கு வரும் 'அனகோண்டா - 3'

பயங்கர பாம்மை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'அனகோண்டா' படம் உலகம் முழுவதும் பரபரப்பாக ஓடி பலகோடி ரூபாவை வசூல்செய்து சாதனை புரிந்தது. அதைத் தொடர்ந்து வந்த 'அனகோண்டா - 2' படமும் உலகம் முழுவதும் வசூலை வாரிப்பொழிந்தது. தற்போது பாம்மை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட 'டே சரஸ் பாரஸ்ட்' என்ற படம் தமிழில் 'டே சரஸ் பாரஸ்டில் அனகோண்டா - 3' என்ற பெயரில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது.


அடந்த காடு ஒன்றில் அதிசயமான யானை ஒன்று இருப்பதை அறிந்து 12 பேர் கொண்ட குழு ஒன்று ஆராய்ச்சிக்காக அந்தக் காட்டுக்குள் போகிறார்கள். அப்படிப் போனவர்களில் ஒருவர் லட்சக்கணக்கில் இருந்த பு,ரான் புற்றுக்குள் விழுந்துவிட ப,ரான்கள் அவரைக் கடித்துக் கொன்றுவிடுகிறது.

அதேமாதிரி தேள் புற்றுக்குள் ஒருவரும், சிலந்திப் புற்றுக்குள் ஒருவரும், கரையான் புற்றுக்குள் ஒருவரும் சிக்கி உருத்தெரியாமல் கொல்லப்படுகிறார்கள். அதற்குப் பிறகு சுமார் 40 அடிகொண்ட ராட்சஸ பாம்பிடம் மாட்டி ஐந்துபேர் இறந்துவிட கதாநாயகனும், கதாநாயகிகள் இருவரும் எப்படி தப்பிப்பிழைக்கிறார்கள் என்ற கதையைப் பயங்கரமான திகிலுடன் படமாக்கியுள்ளனர்.




'மோனலிசா'
சதா

# சினிமாச் சிதறல்



அது ஒரு கனாக்காலம்
தனுஷ் - ப்ரியாமணி



எந்தப் பட...
எங்களுக்கு...
இத்த...
சென்னை வ...
போம் என்ற...
ரசிகர்க...
களுக்க...

இ...

டிரீம் மேக்கர்ஸ் ...
வைத்துத் தயாரிக்கும் ...
கதாநாயகனாக நடிக்கிற...
'நியூ' படத்தில் க...
என்பது தெரிந்த விஷய...
ஒரு இயக்குநர் படத்தில்...
கிறார்.

'யார்', 'கண்ணே...
உன்னை ஒ...
'நம்ம ஊ...
...புக்கட்ட...
எனப் பல படங்...
யார் கண்ணன்...
களை இயக்கு...
காரர். அவரின்...
'யுகா'. இந்தப்...
மணிகண்டன்,...
சந்தோஷி, பார...
நடிக்கிறார்கள்.
ஞர்கள் சோரந்...
தயாரிக்கிறார்...
கின்னஸ் முய...
என்பது குறி...

*

வினிதா தன் ...
...ரிக்கும் ...
இந்தக் காதல...
சொந்தத் தம...
திரையிலும் நடி...
பைனான்ஸ் பிரச்...
தற்காலிகமாக ...
படத்தின் படப்...
யாக முடித்து...
நடிகையாக ...
தயாரிப்...
ஜெயி...

## 3 எம்.எல்.ஏ.கள் விலைக்கு வாங்கப்பட்டனர்

# குடியரசுத்தலைவரிடம் சிபுசோரன் புகார்



மூன்று எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி ஆட்சி அமைத்துள்ள ஜார்க்கண்ட் பா.ஜ.கூட்டணி அரசை டிஸ்மிஸ் செய்யவேண்டும் என்று குடியரசுத் தலைவர் அப்துல் கலாமிடம் சிபுசோரன் நேரில் மனுக்கொடுத்தார்.

ஜார்க்கண்ட் மாநில சட்டசபைத தேர்தலில் எந்தக் கூட்டணியும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்கவில்லை.

முதலில் ஆட்சி அமைத்த ஜார்க்கண்ட முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறியதால் பதவி விலகினார். அதைத்தொடர்ந்து முதல்வர் அர்ஜுன் முண்டா தலைமையில் பா.ஜ. கூட்டணி அரசு பதவி ஏற்றது. சட்டசபையில் ஆஜரான 78 எம்.எல்.ஏக்களில் 40பேரின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. அதேசமயம அதில் 5பேர் சுயேச்சைகள ஆவர். 2 எம்.எல்.ஏ.க்கள் கட்சிமாறி முண்டாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்தநிலையில் சிபுசோரன் நேற்று டெல்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார். அப்போது பிரதமரிடம் அவர் கொடுத்த மனுவில், ஜார்க்கண்டில் 3 எம்.எல்.ஏ.க்களை கோடிக்கணக்கான ரூபாய் விலை கொடுத்து வாங்கி அர்ஜுன் முண்டா ஆட்சி அமைத்து இருக்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் அப்துல் கலாமையும், சிபுசோரன் நேற்றுமுன் தினம் மாலை சந்தித்து இதேபோன்ற மனுக் கொடுத்தால், ஜார்க்கண்ட் முதல்வராக சிபுசோரன் பதவி ஏற்றதைத் தொடர்ந்து தான் வகித்து வந்த மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். தற்போது முதல்வர் பதவியும் பறிபோய்விட்டதால் மீண்டும் மத்திய அமைசசர் ஆக சிபுசோரன் திட்டமிட்டுள்ளார்.

அதோடு தனது கட்சியைச் சேர்ந்த மற்றொரு எம்பி.க்கும் மத்திய மந்திரி பதவி கேட்க சிபுசோரன் முடிவு செய்தார். (து)

WORLD NEWS உலக தரிசனம்





இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காண்டலிசா ரைஸ், புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை சந்தித்துப் பேசிய காண்டலிசா ரைஸ்ஸை படங்களில் காணலாம்.



1985ம் ஆண்டு ஏர் இந்தியா விமானம் கனிஷ்கா தகர்க்கப்பட்ட வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகத் தகுந்த சாட்சியங்கள் இல்லை என்று கூறி அவர்களை விடுதலை செய்துள்ளது பிரிட்டிஷ் கொலம்பஸ் உச்சநீதிமன்றம். 331 பேருடன் பயணம் செய்த கனிஷ்கா விமானம் வானிலேயே வெடித்துச் சிதறியது. அண்டார்டிகா கடலில் விழுந்த விமானப் பாகங்களை படத்தில் காண்க.

## குஜராத் முதல்வருக்கு

# அமெரிக்க விசா மறுப்பு

### மத்திய அரசு தலையிட வேண்டுகோள்

குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த அமெரிக்க விசாவை அவா பயணத்தை மேற்கொள்ள இரண்டு நாள் இருக்கும் நிலையில் அமெரிக்கா திரும்பப்பெற்றது. இது இந்திய அரசியலில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா ஏற்கெனவே அளித்த வசாவைத் திரும்பப்பெற்றது, இந்தியாவை அவமானப்படுத்த அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சி என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி கருத்துத்தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு இப்பிரச்சினையை மத்திய அரசு அணுக வேண்டும். இதுதொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுத உள்ளேன் என்றார் அவர்.

குஜராத்தில் நடைபெற்ற கோத்ரா ரயில் எரிப்புச்சம்பவம், அதைத்தொடர்ந்து நடைபெற்ற வன்முறைகள் குறித்து எந்த நீதிமன்றமும் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த ஒருதலைப்பட்சமான முடிவு இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அதற்குரிய மரியாதையைக் குறைப்பதாவுள்ளது.

அமெரிக்காவுக்குச் செல்வதற்காகப் பிரதமர் மற்றும் மத்திய அரசிடமிருந்து இரு மாதங்களுக்கு முன்பே அனுமதிபெற்றுவிட்டேன். 1998 முதல் அமெரிக்க விசா வைத்துள்ளேன். பயணம் செல்வதற்கு இரண்டு நாளகள் இருக்கும் நிலையில் எவ்வாறு சுற்றுலா மற்றும் வியாபார விசாவை திரும்பப்பெறமுடியும்? இது இந்தியாவின் ஒற்றுமைக்கும், கௌரவத்துக்கும் விடப்பட்ட சவால்.

அமெரிக்கா இவ்விடயத்தில் இரட்டைநிலையை மேற்கொள்கிறது. பாகிஸ்தானுடன் நட்புறவுகொள்ளும் அமெரிக்கா, அந்நாட்டின் தீவிரவாதச செயல்களைக் கண்டுகொள்வதில்லை.

2002இல் நடைபெற்ற கோத்ரா சம்பவத்துக்குப் பிறகு குஜராத் அமைதியாக உள்ளது. அதன்பிறகு தேர்தல் நடைபெற்று மக்களால் இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை வரவேற்றதாகக் கூறும் அமெரிக்கா, இவ்விடயத்தில் இரட்டை வேடத்தைப் போடுகிறது. இவ்வாறு விசாவை ரத்துச் செய்வதற்கு முன்பாக யாரிடமாவது அமெரிக்கத் தூதரகம் கருத்துக்களைக் கேட்டறிந்ததா? இந்தியாவை அவமானப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில்தான் அமெரிக்கா இவ்வாறு செயல்பட்டுள்ளது என அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எந்தவொரு நாடும் மற்றொரு நாட்டின் குடிமகன் மீது தனது சட்டத்தைத் திணிக்கமுடியாது.

ஈராக் மீது போர் நடத்தியது என்ற காரணத்துக்காக அமெரிக்கர்களுக்கான விசாவை இந்தியா எப்போதாவது ரத்துச்செய்ததா?

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குப் போதிய ஆதாரம் இல்லை என்றார் மோடி. (து)

# செக்சியான சைவ அழகி



சைவ உணவுப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் பட்டா என்ற விலங்குகள் நல அமைப்பு உலகின் செக்சியான அழகி மற்றும் அழகன் போட்டியை சமீபத்தில் நடத்தியது.

இதில் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். இறுதியில் கொரீலியசைச் சேர்ந்த மிக்கே ரிஸ்க் என்ற இளம் பெண் செக்சியான சைவ அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் வெர்ஜினியா காமன் வெல்த் பல்கலைக்கழக மாணவி ஆவார்.

செக்சியான ஆண் அழகனாகக் கார்ல் என்ற வாலிபர் தேர்ந்தெடுக்கப்பட்டார். (து)




இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் 21 இந்தியர்கள், பாகிஸ்தானிய காவலர்களால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டு வாகா எல்லை வழியாக இந்தியா வந்தனர். அவர்களை தீவிர சோதனை நடத்தி அனுப்பும் காட்சியை படத்தில் காணலாம்.

# தமிழர்களின் வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்கும் அருங்கலைப் பொக்கிஷம்











## ஆறு திருமுருகனின் அரும்பணியில் விளைந்த அறிவாலயம்

இணுவில் பதிக்கு இருக்கக் கூடிய சிறப்புக்களால் ஈழத் தமிழினம் பெருமையடைகின்றது.

கலைவளமும் தெய்வீகப் பொலிவும் நிறைந்த இணுவில் பதியில் நாலாபுறமும் ஆலயங்கள். கற்றறிந்தார் கூட்டம், யாழொலி, குழலொலி, நேரந்தவறாதொலிக்கும் கண்டாமணியோசை இதனால் அந்தத் திருவூரின் சிறப்புப் பாரெங்கும் பேசப்படுகின்றது.

இவ்வாறு பல சிறப்புகளையும் கொண்டமைந்த இணுவில் மணணற்கு மகுடம் சூட்டுவதுபோல் அங்கு அமைக்கப்பட்டுள்ள அறிவாலயம் அமைந்துள்ளது.

நூலகமும், தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளுக்குச் சான்றாதாரமான தொல்பொருட்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ள கலை அம்சங்கள் பொருந்திய இக்கட்டடம் இன்று திறந்துவைக்கப்படவிருப்பது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்குமுரியதாகும்.

சைவத்திற்கும், தமிழுக்கும் தன்னை அர்ப்பணித்து அரும்பணியாற்றி வரும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் சிந்தையில் தோன்றிய கனவே இன்று அறிவாலயமாக மிளிர்கின்றது.

தீர்க்கதரிசனத்துடன், தமிழர்களின் பெருமைகளுக்கு ஆதாரம் தேடும் ஆசிரியர் ஆறு திருமுருகனின் பணி அற்புதமானது.

தமிழ் மன்னர்களான பரராஜசேகரன், செகராஜசேகரன் ஆகிய இருவருக்கும் அறிவாலயத்தின் இருமருங்கிலும் சிலைவைத்ததன் மூலம் மன்னர்க்குச் சிலையெடுத்த மகத்தான பணியை ஆறு திருமுருகன் ஆற்றியுள்ளார்.

பழம்பெருமை பேசும் தமிழர்களாகிய நாம் மற்றவர்களுக்கு எமது வரலாற்றின் எந்த சின்னங்களைக் காட்டக்கூடியதாக இருக்கின்றது என்ற கேள்வியை எழுப்பிய ஆறு திருமுருகனே அந்தக் கேள்விக்கான பதிலையும் தந்துள்ளார்.

அதுவே தமிழர் தம் வரலாற்றுப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதற்காக இணுவில் கோவில் வாசலில அமைக்கப்பட்ட அறிவாலயமாகும்.

***வித்தகன்.***

## முதலீட்டாளர்களுக்கு விசேட கடன்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சிறு முதலீட்டாளர்களுக்கு விசேட கடன் ஒன்றைக் கிராமிய வங்கிகள் மூலம் வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (க-9)

# சர்வஜன வாக்கெடுப்புத் திட்டம் குறித்த அரசியல்கட்சித் தலைவர்களின் கருத்துக்கள்!

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டு வருவது சம்பந்தமாக அரசியல் அரங்கில் பலவாதப் பிரதிவாதங்கள் தற்போது எழுந்துள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச்செய்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் ஆகிய விடயங்கள் குறித்து மக்களின் கருத்தை 'அறிவதே இந்த சர்வஜன வாக்கெடுப்பின் நோக்கம் எனக் கூறப்படுகிறது. எனினும், இவை இரண்டிற்கும் ஒன்றாகப் பதில் அளிப்பதா? இல்லைத் தனித்தனியாக பதிலளிப்பதா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

பொதுவாக சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்படும்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்ட பின்னரே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். எனினும், ஜனாதிபதியின் தற்போதைய முயற்சியானது அதற்கு முரணாக முதலில சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதாக அமைந்துள்ளது.

இது சம்பந்தமாக அரசியல் கடசித் தலைவர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் தி.மு.ஜயரத்ன இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிய எண்ணம் தற்போது அரசாங்கத்தினுள் தோன்றியுள்ளது. தற்போது ஏற்பட்டிருக்கும பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காணக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை, அதிகாரப் பரவலாக்கம் என்பவற்றை ஒரு திட்டத்திற்கமையவே சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடுவோமே தவிர இதனை ஒரு தீர்க்கமுடியாத பிரச்சினையாக மாற்றும் எண்ணம், ஜனாதிபதிக்கோ, கூட்டமைப்பு அரசிற்கோ கிடையாது எனக் குறிப்பிட்டார்.

ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றபின்னரே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். ஆனால் ஜனாதிபதி வேறு திட்டத்துடன் தற்போது இருக்கிறார்.

முதலில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அதில் வெற்றி பெறுவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். நீங்கள் எப்படி அதனை எதிர்ப்பீர்கள் எனப் பாராளுமன்றத்தில் கேடபார். 13ஆவது அரசியல் திருத்தத்திற்கமைய அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளதால் அதிகாரப் பரவலாக்கம் செய்யவேண்டுமா? என மக்களின் கருத்தை மீண்டும் கேட்க வேண்டிய தேவை இல்லை என்றார்.

இ.தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் இது குறித்துத் தெரிவிக்கையில்,

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம பிரச்சினைகளுக்குத் துல்லியமான, சரியான தீர்வைப் பெறுவது கடினம். இன்று ஜனாதிபதியும், ஐ.தே.கட்சியும் வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி முறைக்குச் செல்ல வேண்டும் என நினைக்கின்றனர்.

அதுமட்டமல்லாது விடுதலைப் புலிகள் கோரிவரும் இடைக்கால அதிகார சபையை வழங்கவும் இருசாராரும் இணங்குகின்றனர். இதனை நாட்டின 80 சதவீத மக்கள் ஏற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி கூறுகிறார். அவ்வாறான நிலையில் சர்வஜன வாக்கெடுப்புத் தேவையா? இல்லையா? என்பதனைத் தீர்க்கமாகத் தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின தலைவர் பெ.சந்திரசேகரன் இதுகுறித்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தனது ஆட்சிக் காலத்தை நீடிக்கும் திட்டத்துடனும், ரணில், பிரதமர் மகிந்த அல்லது வேறு யாரும் ஜனாதிபதி பதவிக்கு வருவதைத் தடுத்துத் தொடர்ந்தும் தானே பதவியில் இருக்கவேண்டும் என்ற திட்டத்துடனுமே சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த எண்ணியுள்ளார்.

தலைவர்கள் தமது பதவிக் காலம் முடியும் தறுவாயில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆபத்தானதாகும். இதில் வெற்றி பெற்றால் அது தவறான முன்னுதாரணமாக அமையும் எனத் தெரிவித்தா (ற-4)

## கிராமிய மட்டத்தில் விசேட செயலகங்கள் அமைக்கப்படும்

### அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கிராமிய செயலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமசேவை அதிகாரிகள் மட்டத்தில் இந்த அலுவலகங்கள் நிறுவப்படவுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராமிய மட்டத்தில் அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள சகல அதிகாரிகளும் இக்கிராமிய செயலகங்களில் பணியாற்றுவர்.

இச்செயலகங்களுக்குத் தலைவராகக் கிராமசேவை அதிகாரியே பணியாற்றுவார்.

இப்புதிய திட்டத்தினால் கிராமங்களில் ஏற்படும் குறைகளை உடனடியாகக் கண்டறிந்து அவற்றிற்கான பரிகாரங்களைத் தாமதமின்றி செயது கொள்ளமுடியும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார். (க-7)

## கிளி.கிராமங்களுக்கு மின்சார விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பல கிராமங்களுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகினறது.

இரணை மடுவில் பொருத்தப்பட்டுள்ள மின்பிறப்பாக்கி மூலமே இக் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது. (க)

## இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டமை பற்றி இலங்கை அரசாங்கத்திற்கு விரைவில் அறிவிக்கப்படும் என இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


17வருடங்களின் பின்னர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாத இறுதியில் இலங்கை வருவதற்கு இநதியப் பிரதமர் மன்மோகன் சிங தீர்மானித்திருந்தார்.

ஆனால் அவர் எதிர்வரும் யூலை மாதத்தின் பின்னரே இலங்கை வருவார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை - இந்தியாவிற்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம உள்ளிட்ட முக்கிய உடன்படிக்கைகள் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் அவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசத்தை வழங்குவதற்கு ஏற்றவகையிலேயே இந்தியப் பிரதமரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையுடன செய்துகொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையில் இருநாட்டு பாதுகாப்பு அமைச்சுக்களின் செயலாளர்களே ஒப்பமிடவுள்ளதாகவும், அமைச்சரவை மட்டத்தில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்படமாட்டாது என்றும் கூறப்படுகின்றது. (க-9)





# மும்தாஜுக்கு மிரட்டல்

கதாநாயகியாக அறிமுகமாக' தற்போது படங்களில சிறிய வேடத்தில் நடிப்பது பற்றி மும்தாஜிடம் நிருபர்கள் கேட்டபோது,

கதாநாயகியாக மட்டுமே நடிக்க விரும்பினேன். அது நடக்கவில்லை. இப்ப ஒன்றிரண்டு சன்களிலும், ஒரு பாட்டுக்கும் தலை காட்டுகிறேன். இப்படியெல்லாம் ஏன் நடிக்கிறங்க என்று நிறையப் பேர் குறைபடுறாங்க. எனக்கும் முதலில் அது பிடிக்காமல்தான் இருந்தது.

ஆனால் எனக்குக் கடிதம் அனுப்பும் ரசிகர்கள் நங்கள் தொடர்ந்து நடிக்கவேண்டும். எந்தப் படத்தையும் வேண்டாம்னு சொல்லாதர்கள். நங்கள் நடிக்காத படங்களை எங்களுக்குப் பார்க்க விருப்பமில்லை.

இத்தனை நாள் இடைவெளிவிட்டது போதும். இனியும் தொடர்ந்து நடிக்காவிட்டால் சென்னை வந்து அண்ணா நகரில் உள்ள உங்கள் வட்டு முன்னால் உண்ணாவிரதம் இருப்போம் என்று எழுதி உள்ளனர்.

ரசிகர்கள் என் மது வைத்துள்ள அன்பும் பாசமும் என்னை நெகிழவைத்தது. அவர்களுக்க[illegible]த்தான் சின்ன வேடம்னாலும் நடிக்க ஒப்புக்கொள்கிறேன் என்றார் மும்தாஜ்.



'மழை
ஜெயம் ரவி - ஸ்ரேயா

# இளமையான காதல் கதை – '36–28–36'

டிரீம் மேக்கர்ஸ் யு.கே. 5 என்ற புதிய பட நிறுவனம் இளமையான காதல் கதையை மையமாக வைத்துத் தயாரிக்கும் படத்திற்கு '36-28-36' என்று பெயரிட்டுள்ளது. இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார்.

'நியூ' படத்தில் கதாநாயகான அறிமுகமான எஸ்.ஜே.சூர்யாவின் அடுத்த படம் 'பெஸ்ட் பரண்ட்' என்பது தெரிந்த விஷயம். தன் இயக்கத்தில் மட்டுமே நடித்துக்கொண்டிருந்த எஸ்.ஜே.சூர்யா வேறு ஒரு இயக்குநர் படத்தில் முதன் முதலாக நடிப்பது குறிப்பிடத்தக்கது. கதாநாயகியாக நயன்தாரா நடிக்கிறார்.

# நாங்க ஃப்ரெண்ட்ஸ் தான்

விருது வழங்கும் விழா ஒன்றுக்கு ஸ்ரீகாந்த், சிநேகா வந்திருந்தனர். விழாவில் பல கலைஞர்கள் வந்திருந்தாலும் ஸ்ரீயும் சிநேகாவும்தான் ஜொலித்துக்கொண்டிருந்தார்கள. ஜாலியாகப் பேசிக்கொண்டும் இருந்தார்கள்.

'[illegible] நாங்க நல்ல ஃப்ரெண்ட்ஸ் அவ்வளவுதான்.



எனக்கு எல்லா நடிகைகளுமே நல்லாத் தெரியும். அனைவருடனும் நட்பு வைத்துக்கொள்ள விரும்புகிறவன் நான். நடிகைகள் மட்டுமல்ல, நடிகர்கள், இயக்குநர்கள் என எல்லாப் பிரிவுகளிலும் எனக்கு நண்பர் பட்டாளமுண்டு. நடிகைகளுடன் நட்பாக இருக்கும்போது தவறான செய்திகள் வருவது சகஜம். ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தது. இப்போது பழகிவிட்டது. ஏனென்றால் சம்பந்தப்பட்ட நடிகைக்கும் இது பொய் என்பது தெரியும். எனக்கும் தெரியும். பின் நான் ஏன் கவலைப்படவேண்டும்' என்று படபடவென அடித்துத் தள்ளுகிறார் ஸ்ரீகாந்த்.

இதையே சிநேகாவிடம் கேட்டால், 'காதல் என்பது ஓா உணர்சசிதான். ஆனால் இதுவரை எனக்கு அந்த உணர்வு ஏற்பட்டதில்லை. எனது பெற்றோர் சொல்லுமிடத்தில் நான் திருமணம் செய்துகொள்வேன். ஒருவேளை இனிமேல் யாரையாவது காதலித்தாலும் பெற்றோர் சம்மதத்துடன்தான் திருமணம் நடக்கும்' என்கிறார்.

# அங்கீதா – மும்தாஜ் கவர்ச்சி மோதல்



'மோனலிசா'
சதா

சுந்தர்.சி இயக்கத்தில் பிரஷாந்த், அங்கீதா ஜோடி சேர்ந்து நடிக்கும் 'லண்டன்' படம் பிரமாண்டமான அம்சங்களுடன் தயாராகி இருக்கிறது. தெலுங்கில் படுகவர்ச்சி காட்டி ஆடிக்கொண்டிருந்த அங்கீதா, 'லண்டன்' படத்தில் தமிழ் ரசிகர்களின் கனவுக்கன்னி ஆகவேண்டும் என்பதற்காக ஆடையைக் குறைத்து மும்தாஜுடன் போட்டி போட்டு நடித்துள்ளார்.

மும்தாஜ், அங்கீதாவுடனான கவர்ச்சிப் போட்டியில் ஜெயிக்கப்போவது யார் என்பது விரைவில் தெரியும்.

'யார்', 'கண்ணே கனியமுதே', 'உன்னை ஒன்று கேட்பேன', 'நம்ம ஊரு நாயகன்', '[illegible]புக்கட்ட[illegible]', 'மகுடிக்காரன் எனப் பல படங்களை இயக்கிய யார் கண்ணன் அமானுஷ்ய படங்களை இயக்குவதில் கெட்டிக்காரர். அவரின் லேட்டஸ்ட் படம் 'யுகா'. இந்தப் படத்தில் ரிச்சாட், மணிகண்டன், காதல் சுகுமார், சந்தோஷி, பாரதி உட்பட பலர் நடிக்கிறார்கள். 50 நடனக் கலைஞர்கள் சோந்து இந்தப் படததை தயாரிக்கிறார்கள். இது ஒரு கின்னஸ் முயற்சி திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

வினிதா தன் தம்பி சங்கருக்காக த[illegible]ரிக்கும் [illegible]குச் 'துள்ளும் காலம்'. இந்தக் காதல் படத்தில் தன் சொந்தத தம்பிக்கு அக்காவாக திரையிலும் நடிக்கிறார் வினிதா. பைனான்ஸ் பிரச்சினை காரணமாக தற்காலிகமாக நின்றிருந்த இந்தப் படத்தின் படப்பிடிப்பை ஒரு வழியாக முடித்துவிட்டார் வினிதா. நடிகையாக ஜெயித்த வினிதா, தயாரிப்பாளராகவும் ஜெயிக்கட்டும்.

'அவ உன்னையேதான் பார்க்கிறா, அவளை எப்படியாவது காதலி' என நண்பர்களின் உற்சாகத் தூண்டுதலின் பேரில் விளையாட்டாக முளைக்கத் தொடங்கும் காதலானது கடைசியில் விபரீதமான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடும் எனக் காதலை புதிய கோணத்தில் சொல்லவரும் படம் '18 வயதில் நான்'. புதுமுகங்கள் நடிக்கும் இந்தப் படத்தை இயக்குவது டி.ஏ.ஆனந்த்.



'தம்பி'
மாதவன் - பூஜா

# பேரம் பேசும் சிம்பு

பி.எல்.தேனப்பன் தயாரிக்கும் 'வல்லவன்' படத்தை சிலம்பரசன் இயக்கி நடிக்கிறார். அவர் பி.எல்.தேனப்பனிடம் ஒரு சலுகை அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஒரு படத்தில் தனக்கு ஜோடியாக ஐஸ்வர்யாராயைப் போடுமாறு அவர் கூறியுள்ளார். ஐஸ்வர்யாராய நடிப்பதாக இருந்தால் தனது சம்பளத்தைக் கணிசமாகக் குறைத்துக்கொள்வதாக அவர் பேரம்பேசி வருகிறார். சிம்புவின் கனவு பலிக்குமா? என்று தெரியவில்லை.

அவர் கை நழுவிப் போய்விட்டதால் அவர் பெயரில் உள்ள நடிகை மீது ஆசையோ...?

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 13



### அத்தியாயம் IV

விடுவிக்கப்படும் சவால் தகுதியானதோ இல்லையோ பாராளுமன்ற விசாரணைக்கான உரிமையை மறுக்க முடியாது. நடைமுறைப்படி சம்பந்தப்பட்ட அமைச்சர் குற்றத்தை ஒப்புக்கொள்கின்ற முறையிலன்றி மாறாக அவருக்கெதிரான கண்டனத்தின் நிமித்தம் அரசாங்கத்தின் மீதுள்ள அழுத்தத்தை நீக்கும் பொருட்டுப் பதவி விலகலாம். “நம்பிக்கையில் லாப் பிரேரணை”, “கண்டனப் பிரேரணை” ஆகிய சொற்றொடர்கள் பெரும்பாலும் ஒன்றையொன்று மாற்றீடு செய்யக் கூடியவகையில் பயன்படுத்தப்படுகின்றன.

அமைச்சரொருவர் மீதான கண்டனப் பிரேரணை அரசாங்கக் கொள்கை தொடர்பானதாயிருந்தால் அது தொடர்ந்தும் பதவிவகிக்க வேண்டுமாவென அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். அமைச்சரொருவர் மீதான கண்டனத் தீர்மானத்தின் விடயத்தில், அவரின் கீழ் பணியாற்றுபவர்களின் எல்லாக் குறைகளுக்கும் தவறுகளுக்கும் அவர் குற்றப் பொறுப்பை ஏற்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. எனினும் அவர் எடுக்க உத்தேசித்துள்ள திருத்த நடவடிக்கை பற்றி சபைக்கு உறுதியளிக்க வேண்டும். கண்டிக்கப்படும் நடவடிக்கை அவரின் பணிப்புரையின் பேரில் எடுக்கப்பட்டதென வெளிப்பட்டால் அவர் தனிப்பட அதற்குப் பொறுப்பானவராக்கப்பட வேண்டும்.

1981 இல் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக, அவர் இலங்கைக்குள் தனி நாடொன்று நிறுவப்படுவதை ஆதரித்து வாதாடுகின்றாரென்ற அடிப்படையில், கண்டனப் பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டது. அத்தகைய பிரேரணைகள் வழமையாக அமைச்சரவை அமைச்சர்களுக்கெதிராகக் கொண்டு வரப்படுவதனால் இது இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் ஒரு தனித்துவமான நிகழ்வாக விளங்கியது. இச்சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தமது பதவியை இராஜினாமாச் செய்ய நேரிட்டது.

ஒரு தனியார் உறுப்பினரைக் கண்டித்தல் பொதுவாக இடம் பெறுவதில்லை. அது பயனற்ற ஒரு முயற்சியாகக் கருதப்படுவதுடன் பண்பற்ற ஒரு வழக்கமுமாகும். உறுப்பினர் ஒருவர் நீதி முறையு,டாகத் தவிரத் தமது உறுப்புரிமையை இழப்பதில்லையென்பதே இதற்குக் காரணமாகும்.

#### *அரசியற் குற்றப் பிரேரணை*

அரசியற் குற்றப் பிரேரணை நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் பகுதியில் அடங்கின போதிலும், அரசியலமைப்பின் 38(2) ஆம் உறுப்புரையின் கீழான அத்தகைய ஒரு பிரேரணையை ஒரு சாதாரண பிரேரணையாகக் கருதக் கூடாது. அது அதற்காக விசேட அரசியலமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழக்கம் மீறிய ஒரு பிரேரணையாகும்.

வேறெந்தப் பிரேரணையும் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படும் போது மட்டும் ஒரு பாராளுமன்ற நடவடிக்கையாகின்ற அதே வேளையில் அரசியற் குற்றப் பிரேரணையொன்று சபாநாயகரால் ஏற்றுக் கவனிக்கப்படும் போதே அவ்வாறானதாகின்றது. மேலும் சபாநாயகர் மட்டும் தான் (பிரதிச் சபாநாயகரல்ல)அரசியற் குற்றப் பிரேரணையொன்றை ஏற்றுக் கவனிக்கலாம்.

அரசியற் குற்றப் பிரேரணைகள் அமர்வு நிறுத்தத்தின் பேரில் காலாவதியாவதில்லையென்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழக்கம். அரசியற் குற்றப் பிரேரணையொன்று பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குச் செயல் விளைவுடையதொரு தடையாகச் செயற்படுவதே இதற்குக் காரணமாகும். எனவே ஓர் அமர்வு நிறுத்தத்தினால் அது காலாவதியாகக் கூடுமாயின் கலைப்பொன்றுக்கு அது தடையாக இருக்க மாட்டாதென்பது இதிலிருந்து தொடர்கின்றது.

அரசியற் குற்றப் பிரேரணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் சபையின் அமர்வு நிறுத்தப்பட முடியும். அமர்வு நிறுத்தத்தின் போதும் சபாநாயகர் தொடர்ந்து கடமையாற்றுகின்றார். எனவே பாராளுமன்ற அமர்வு நிறுத்தத்தின் போது கூடச் சபாநாயகர் அரசியற் குற்றப் பிரேரணையொன்றை ஏற்றுக் கவனிக்கலாமென்று வாதிடலாம்.

மேற்படி வாதம் ‘தர்மதாச கோமஸ் எதிராக மொதமட்’ என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. அரசியற் குற்றப் பிரேரணையொன்று சபாநாயகரால் ஏற்றுக் கவனிக்கப்படுவதன் பேரில் ஒரு பாராளுமன்ற நடவடிக்கையாகின்றதென அத்தீர்ப்புத் தெரிவித்தது. ஜனாதிபதி மீது அரசியற் குற்றம் சுமத்துவதற்காக 1991 இல் கொண்டு வரப்பட்டுப் பின்னர் சிதைக்கப்பட்ட பிரேரணை, சபாநாயகரால் ஏற்றுக் கவனிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாகச் சபையின் அமர்வு நிறுத்தப்பட்டது. புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாகியதன் பின்னர் தான் சபாநாயகர் தாம் அதனை ஏற்றுக் கவனிப்பதை நிறுத்திவிட்டாரென அறிவித்தார். எனவே அமர்வு நிறுத்தத்தின் போது அது காலாவதியாகவில்லையென்ற உண்மையைச் சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

உறுப்புரை 38(2) இன் கீழ் அரசியற் குற்றப் பிரேரணைக்கான முன்னறிவித்தல், மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாக ஜனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளாரென அல்லது அரசியலமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றத்தை, தேசத்துரோகம் புரிந்த குற்றத்தை, இலஞ்சம் பெற்ற குற்றத்தை தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றத்தை அல்லது ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கிய ஏதேனும் தவறைப் புரிந்ததற்குக் குற்றவாளியாகவுள்ளாரெனச் சார்த்த வேண்டும். அத்தகைய ஒரு பிரேரணையில் சபை உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் 2/3 பங்குக்குக் குறையாதவர்கள் கையொப்பமிட்டிருந்தால் சபாநாயகர் கட்டாயமாக அதனை ஏற்றுக் கவனிக்க வேண்டும். அது உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 1/2 பங்குக்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருப்பினும் அதிலுள்ள குற்றச்சார்த்தல்கள் விசாரணைக்குத் தகுதியுடையனவென்று சபாநாயகர் திருப்தியடைந்தால் அவர் அதனை ஏற்றுக் கவனிக்கலாம்.

அதனைத் தொடர்ந்து அத்தீர்மானம் சபையில் 2/3 பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டால் சபாநாயகர் அதனை விசாரணை செய்து அறிக்கையிடுமாறு உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்த வேண்டும். உயர்நீதிமன்றம் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அதன் அபிப்பிராயத்தை அறிக்கையிட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுவது பிரதம நீதியரசர் உட்பட ஐந்து பேருக்குக் குறையாத நீதிபதிகள் குழாத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி அவரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதுள்ளாரென அல்லது தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட குற்றங்களில் எதற்கேனும் குற்றவாளியாயுள்ளாரென உயர் நீதிமன்றம் தீர்மானிக்குமாயின், ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அப்பிரேரணை மீண்டும் சபையில் 2/3 பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.

#### *எதிர்நோக்கல்*

நிலையியற் கட்டளை 36 இல் பயன்படுத்தப்பட்டவாறு எதிர்நோக்கல் என்பது நியாயமான கிட்டிய எதிர் காலத்தில் பரிசீலிக்கப்படவுள்ள ஒரு விடயத்தை எதிர்நோக்குகின்ற பிரேரணையொன்றைக் கருதுகின்றது. எனவே ஒரு சட்டமூலம் அல்லது வேறேதேனும் விடயம் கிட்டிய எதிர்காலத்தில் விவாதிக்கப்படுவதாயிருந்து உரியமுறையில் அவ்விடயம் பற்றிய முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பின், அதேவிடயம் பற்றி வேறொரு பிரேரணையைச் சமர்ப்பித்தல் ஒழுங்கற்றதாகும். ஓர் அலுவல் விடயம் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் போது அதே விடயம் பற்றிய முன்கூட்டிய ஒத்திவைப்புப் பிரேரணையொன்றை அனுமதித்தல் ஒழுங்கற்றதாகையால் அத்தகைய பிரேரணை நியாயப்படி நிராகரிக்கப்பட வேண்டும். அவ்வாறே உத்தேச சட்டமூலங்களுக்கான திருத்தங்கள் எதிர்நோக்கப்படக்கூடாது. (தொடரும்)

# தீவக வலயத்தில் முறைசாராக்கல்வியின் நான்கு தொழிற்பயிற்சி நிலையங்கள்


(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் இவ்வாண்டுக்காக முறைசாராக் கல்வி அலகின் நான்கு தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தீவகக் கல்வி வலயத்தில் முறைசாராக்கல்வி அலகினால் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி,ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையில் உடை அமைத்தல் பயிற்சி, கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகாவித்தியாலயத்தில் உணவு பதப்படுத்தல் பயிற்சி,ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கண்ணாடிப் பிறேம் போடுதல் பயிற்சி போன்றன நான்கு நிலையங்களில் நடாத்தி முறை சாரா உதவிக் கல்விப்பணிப்பாளர் க.கணபதி முன்னேற்பாடுகளையும், ஒழுங்கமைப் பினையும் மேற்கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை பயிற்சி நெறிக்கான அனுமதியையும் போதனாசிரியர்களுக்கான நியமனக் கடிதத்தையும் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரன் வழங்கியுள்ளார்.

இப் பயிற்சி நெறிகள் சித்திரை முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தீவக வலயத்தில் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாது இடைநிறுத்திய, வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர், யுவதிகளுக்கு இத் தொழிற்பயிற்சி வழங்கப்படுவதன் காரணமாக சுய தொழில் வாய்ப்பையும் அதன் மூலம் வருமானத்தையும் ஈட்டமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ற)





நோர்வே பேர்கன் நகரில் தமிழ் மகளிர் அமைப்பினரால் அண்மையில் நடாத்தப்பட்ட உள்ளரங்க விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் இருந்து...

## “என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்”

இந்திய சுந்திரப் போராட்டத்தின்போது, டில்லிக்குச் செல்வோம் என்று சொல்லி வீரமுழக்கம் எழுப்பினார் சுபாஷ் சந்திர போஸ். தலை நகராகிய டில்லிக்குச் செல்வோம் என் றால், ஆதிக்கச் சக்திகளுக்கு சமாதி கட்டுவோம் வாரீர் என்பதே அதன் அரசியல் அர்த்தமாகும். அதுபோலவே, எருசலம் நோக்கி நுழைகின்றார் இயேசு. இயேசுவின் சீடர்கள் அவரில் தாம் வைத்திருந்த விசுவாசத்தையும் கொண்டிருந்த பக்தியையும் வெளிப்படையாக ஊர்வலமாகச் சென்று உலகத்துக்கு அறிவிக்கிறார்கள். இயேசுவின் எதிரிகள் அவரைக் கொலை செய்ய தேடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், பகைவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சாமல் அதற்கு அறைகூவல் விடுவது போல சீடர்களின் குருத்தோலைப் பேரணி நடைபெற்றது. சீடரது வெற்றி ஆர்ப்பரிப்புக்களைக் கேட்டு வெகுணடெழுந்த இயேசுவின் எதிரிகள் சீடர்களின் வாயை அடக்கி வைக்க சொன்னபோதுரூ இவர்கள் பேசாதிருந்தால், இக்கற்களே கத்தும் என்றார் இயேசு. (லூக் 19:40)



### தவக்காலச் சிந்தனை

இயேசுவிடம் நாம் வைத்திருக்கும் வீசுவாசத்தை கோயிலில் வந்து செபமாலை பாடலாக அறிக்கையிடும் நாம்

அவ்விசுவாசத்திற்கு கோவிலுக்கு வெளியே, பொது இடங்களில் சாட்சியம் வழங்குகிறோமா? கற்கள் பேசாது. மனிதர்தான் வாய் திறந்து பேச முடியும். அநீதியாக நடத்தப்படும் ஒரு ஆளுக்கு ஆதரவு அளித்து நாம் பேசும் போது; பொது நன்மைக்காக உழைக்கும் ஒருவரை உலகம் கண்டுகொள்ளாவிடிலும் அவரது பணியைப் பலர் கேட்க நாம் பாராட்டும் பொழுது இயேசுமீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படையாக நாம் அறிவிக்கிறோம். பொதுவில் குருத்தோலை பவனி மட்டும் வருவது போதாது; பொது வாழ்வில் வீசுவாசத்திற்காக குருத்தோலை ஏந்தி சாட்சிகளாக மாறுவோம்.

காவலன்

# புனித நகரில் பிலாத்துவின் அரண்மனை தொடங்கி கொல்கொத்தா வரை இயேசுவின் துன்பப் பாதையில்..

மானிடர் எம்மை மீட்க மனுவுருவெடுத்த இறைமகன் கிறிஸ்து சிலுவை சுமந்து சென்ற பாதை



தான் துன்பத்தின் பாதையாக பாடுகளின் பாதையாக இன்று அழைக்கப்படுகின்றது. இயேசு மரணத் தீர்வையிடப்பட்ட பிலாத்துவின் அரண்மனை தொடங்கி சிலுவையில் அறையப்பட்ட ''கொல்கொத்தா'' எனக் கூறப்படும் மண்டையோட்டு மலை வரை நடந்து சென்ற பாதை தான் இப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

இப் பாதையில் நடந்த நிகழ்ச்சியாக 14 தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 9 சம்பவங்கள் நற்செய்திகளை அடிப்படையாகக் கொண்டும் ஏனைய ஐந்தும திருச்சபையின் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டும் உருவாக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு தலங்களும். பிலாத்துவின் அரண்மனைக்கருகிலுள்ள ''இதோ மனிதன் வளைவு'' க்கு அருகிலும் 7 தலங்கள் கல்வாரி மலைவரை செல்லும் தொருவின் இரு மருங்கிலும, மிகுதி ஐந்து ஆண்டவருடைய கல்லறை அமைந்துள்ள ஆலயத்தினுள்ளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 4 ஆம் நூற்றாண்டிலிருந்தே கிழைத்தேய உரோமைப் பேரரசைச் சேர்ந்த யாத்திரிகர்கள் இந்தப் பாதையின் வழியே நடந்து சென்று இயேசுவின் பாடுகளைத் தியானிகக ஆரம்பித்தனர். 14 ஆம் நூற்றாண்டளவில் தான் பிரான்ஸிஸ்கன சபையினர் இதனை ஒரு பக்தி முயற்சியாக்கி, 14 தலங்களையும் ஏற்படுத்தி இயேசு சென்ற பாதை வழியே சென்று அவரது பாடுகளைத் தியானிக்கும் சிலுவைப் பாதைப் பக்தி முயற்சி காணலாம்.

15 நூற்றாண்டுக்குப் பின்பு புனித நாட்டுக்கு வந்த யாத்திரிகர்கள் சிலுவைப் பாதை செய்யும் நற்பக்தி முயற்சியை, தாங்கள் நாடு திரும்பியவுடன் தங்கள் வீடுகளிலும் தொடர்ந்து இப்பக்தி முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று அவாவினாலும், புனித நாட்டு யாத்திரையில் பங்கு கொள்ள முடியாதவர்களும், இந்தப்பக்தி முயற்சியில் பங்கெடுக்க வழி செய்யும் வகையிலும், பாடுகளின் பாதையில் நடைபெற்ற நிகழச்சிகளை நினைவு கூரும் முகமாக அடையாள கருத்துக்களைச் செய்து இப்பக்தி முயற்சி வளர வழிவகுக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக உருவான சிலுவைப்பாதை தான் இன்று எம் மத்தியிலும் 14 நிலைகளாக படங்களிலோ, உருவச் சிலைகளிலோ அமைக்கப்பட்டு இயேசுவின் பாடுகளை தியானிக்க உதவுகிறது. இயேசு சிலுவை சுமந்து சென்ற அதே பாதையில் தினமும் புனித நாட்டுக்கு வரும் யாத்திரிகர்கள் சிலுவைப் பாதைத் தியானத்தைச் செய்யத் தவறுவதில்லை. இன்று அப்பாதையின் இரு மருங்கிலும் வீடுகளும், கடைகளும் அமைந்திருப்பதால், சன நெருக்கடி அதிகரிக்கும் காலை 6 மணிக்கு முன்பே எல்லோரும் சிலுவைப் பாதை

## பரமபிதா காட்டிய பாதை

செய்யத் தொடங்கி விடுகின்றனர். பலர் குழுக்களாகவும், சிலர் தனிப்பட்ட முறையிலும் சிலுவைப்பாதைத் தியானத்தைச் செய்கின்றனர்.

இயேசுவின் பாதம் பதித்த அந்தப் பாதை வழியே கோடானு கோடி பக்தர்கள் நடந்து சென்றாலும், நாங்கள் அப்பாதை வழியே பாடுகளைத் தியானித்துச் செல்கையில், விபரிக்க முடியாத ஒரு புது அனுபவம் தான்.

### பரிசுத்த கல்லறை ஆலயம்

சிலுவைப் பாதையின் இறுதி 5 நிலைகளும் அமைந்துள்ள ஆலயம் தான் பரிசுத்தக் கல்லறை ஆலயம் என இன்று அழைக்கப்படுகின்றது. இயேசுவின ஆடைகள் களையப்பட்டன, சிலுவையில் அறையப்பட்டது, சிலுவையில் உயிர் நீத்தது, சிலுவையின் நின்று இறக்கித் தாயின் மடியில் வைக்கப்பட்டது, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது ஆகிய 5 நிலைகளும் ஒரே கூரையின் கீழ் அமைந்துள்ளது வியப்பாகவும் வினாக்களை எழுப்பவும் தூண்டியது.

இந்த இடம் தான் இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம், இக்கல்லறை தான் இயேசுவை அடக்கம் பண்ணிய கல்லறை என்று எவ்வாறு திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடியும்? நற்செய்திக் குறிப்புகளும், வரலாற்றுச் சான்றுகளும், தற்போதுள்ள தடயங்களும் அவை உண்மையென நிரூபிக்கின்றன. ''இயேசு சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு எபிரேய மொழியில் கொல்கொத்தா எனப்படும் இடத்திற்குச் சென்றார். அதற்கு மண்டையோடு என்பது பொருள். அங்கு இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள்'' (யோவா 19:17)

கிறிஸ்தவ உலகின் மிகவும் புனித இடமாகிய பரிசுத்த கல்லறை ஆலயத்தில் கல்வாரி மலை, கல்லறை ஆகிய இரு இடங்களும் உள்ளடக்கப்பட்டன. ''இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடம் நகருக்கு வெளியில் இருந்து'' (யோவா 19:20) என யோவான் கூறுகின்றார். யோவான் கூற்றின் படி கல்வாரி மலையும், கல்லறையும் எருசலேம் நகருக்கு வெளியே இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் யூத சட்டத்தின் படி பரிசுத்த நகருக்குள எவருமே புதைக்கப்படக் கூடாது. அவ்வாறாயின் கல்வாரியையும், கல்லறையையும் உள்ளடக்கிய பரிசுத்த கல்லறை ஆலயம் எவ்வாறு, எப்போது எருசலேம் சுவருக்குள்ளே வந்தது? இயேசு சிலுவையில் அறையப்பட்டு 11 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது கி.பி 44 இல் ஏரோது அக்கிப்பா மன்னனால் கட்டப்பட்ட சுவர் கொல்கத்தாவையும் உள்ளடக்கிக் கட்டப்படடது. சென்ற நூற்றாண்டின் மையப்பகுதியில் தான் பழைய சுவர் கண்டு பிடிக்கப்பட்டது. அதன்படி கல்லறைகள் அனைத்தும் நகருக்கு வெளியேதான் அமைந்திருந்தன.

எருசலேம் ஆலயமும், நகர் முழுவதும் கி.பி.70 ஆம் ஆண்டு உரோமையர்களால் தரை மட்டமாக்கப்பட்டது. கி.பி.150

> ''இயேசுவின் பாடுகள் இறப்பில் மாத்திரம் அல்ல - உயிர்ப்பிலும் நம்பிக்கை உள்ள மக்களாக எமது வாழ்வில் வரும் சோதனை, வேதனை, இழப்பு ஆகிய வற்றிலும் நம்பிக்கை உடையவர்களாக வாழ்வோம். மரணத்தை அடிமையாக்கி உயிர்ப்பை தனதாக்கிய இயேசுவைப் போல்'' (1கொரிந்தியர் 15:55)

ஆம் ஆண்டு உரோமைப் பேரரசன் அதிரியான் யூதமதத்தினதும், கிறிஸ்தவ மதத்தினதும் நினைவுச் சின்னங்களை அடியோடு அழிக்கும் முகமாகக் கல்வாரியையும், கல்லறையையும் தடமில்லாமல் செய்வதற்காக எருசலேம் நகரிலுள்ள எல்லாக்கற்களையும் ஒன்றாக மலை போல் குவித்து அதன்மேல் யுப்பிற்றர் (Jupitor) பெயரில் உரோம ஆலயம் ஒன்றைக் கட்டிச சென்றான் எனக் கூறபபடுகின்றது.

அவனது தீய செயல் கிறிஸ்தவர்களுக்குத் தீமை விளைவிப்பதற்குப் பதிலாக நன்மையை விளைவித்தது. ஏனெனில் 2ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு கொன்ஸ்தாந்தின் மன்னன் புனித நாட்டுக்கு வந்த போது கல்வாரி மலையையும், கல்லறையையும் கண்டுபிடிக்க வழிசெய்தது.

வரலாற்றுக் குறிப்புகளின் படி கொன்ஸ் தாந்தினுடைய தாய், புனித எலேனம்மாள் கி.பி.326 இல் அதிரியான் கட்டிய யுப்பிற்றர் ஆலயததை இடித்துத்தகர்த்த போது நற்செய்திகளில் குறிப்பிட்டுள்ள தரவுகளின்படி கல்வாரியையும் கல்லறையையும் அருகருகே இருப்பதைக் கண்டு பிடித்ததாகவும், கொன்ஸ் தாந்தின் மன்னனின் கட்டளைப்படியும், எலேனம்மாவின் மேற்பார்வையிலும் அதே இடத்தில் பரிசுத்த கல்லறை ஆலயம் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

அவ்வாலயம் 614 இல் பேச்சியர்களால் தகர்க்கப்பட்டு மீணடும் கட்டியெழுப்பப்பட்ட போது 1009 இல் துருக்கியர்களால தரைமட்டமாக்கப்பட்டது. சிலுவைப்போர் தொடங்குவதற்கு முக்கிய காரணம் இதுவாக அமைந்தது 1149 இல் சிலுவைப் போர் வீரர்களால் கட்டப்பட்ட ஆலயம் தான் இன்று வரை உள்ளதாகக் கூறப்படுகின்றது.

### கல்வாரி மலை

கல்வாரி மலை என்பது எதிர் பார்ப்பது போல் பெரிய மலை அல்ல. ஏறக்குறைய நிலத்திலிருந்து 45 அடியளவில் உயர்ந்து மண்டையோடு உருவத்தில் அமைந்திருந்த தால்தான் அதற்கு மண்டையோட்டு மலை எனப் பெயர் வைத்தார்கள் போலும்.

இன்று அதனை மலையாகப்பார்க்க முடியாது. ஆனால் அதன் மேல் இரண்டு பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடததிற்கு மேல் உள்ள பீடம் ''கிரேக்க மரபு வழுவாத் திருச்சபைக்கும்'' (GREEK ORTHODOX), இயேசுக்கு ஆடைகள் களையப்பட்ட இடத்தின் மேல் உள்ள பீடம் ''உரோமன கத்தோலிக்கத் திருச்சபைக்கும்'' உரியதாகக் கூறப்படுகின்றது.

கலவாரி மலையின் பாதையைப் பீடத்தின் கீழ் அமைககப்பட்டுள்ள கண்ணாடி வழியாகத்தான் பார்க்க முடியும்.

### இயேசுவின் கல்லறை

''அவர் சிலுவையில் அறையுண்ட இடத்தில் தோட்டம் ஒன்று இருந்தது. அத்தோட்டத்தில புதுக்கல்லறையொன்று இருந்தது. அதில் யாரையும் வைத்ததில்லை. அருகிலேயே அந்தககல்லறை இருந்தாலும் அன்று யூதரின் பாஸ்காவுக்கு ஆயத்த நாள் என்றதாலும் இயேசுவை அதில் வைத்தனர்'' (யோவான் 19:41) கல்லறையில் இரண்டு அறைகள் உண்டு. முன்னறையில் மக்கள் கூடிச் சடங்குகள் செய்யும் இடமாகவும், பின் அறையிலுள்ள கற்பாளத்தில் உடலை வளர்த்தி வைப்பதற்கும் பயன்பட்டது.



தற்போது கல்லறையின் மேல் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் கிரேக்க மரவு வழுவாத திருச்சபையினருக்குரியது. ஆயினும் வரலாற்றில் எழுந்த பல்வேறு பிரச்சினைகளின் நிமித்தம் பல்வேறு சபையினருக்கும் வழிபாடு நடாத்த காலை 6 மணிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். கல்

**நோயல்**

லறைககுச் செல்வதற்கு குனிந்து தான் செல்லவேண்டும். உள்ளே ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு மேல் இருக்க முடியாது.

இயேசுவை அடக்கம் செய்து வளர்த்தியதாகக் கூறப்படும் கற்பாளத்தின் மேல் ஒரு பளிங்குக்கல் (MORBLE SLAB) வைத்துள்ளனர். அதுவே திருப்பலிப் பீடமாக பயன்படுத்தப்படுகினறது. □

# இலங்கைக்கு சவுதி அரேபிய அரசு தொடர்ந்தும் உதவி செய்யுமாம்

## அந்நாட்டு இளவரசர் சரத் அமுனுகமவிடம் உறுதியளிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சவுதி அரேபியா தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதுடன் இலங்கை எரிபொருள் நெருக்கடியைச் சந்திக்குமானால் உடனடியாக உதவி செய்ய சவுதி ஆரேபியா முன்வருமென சவுதி இளவரசர் அல்வலீத் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத், நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகமவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வந்தள்ள சவுதி இளவரசர் நேற்றுமுன்தினம் காலை அமைச்சர் சரத் அமுனுகமவை நிதியமைச்சு அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய போதே இந்த உறுதி மொழிகளை வழங்கியதாக அமைச்சரின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சுனாமியால் பாதிப்புகள் ஏற்பட்ட உடனேயே சவுதி அரேபியா உடனடி நிவாரணங்களை அனுப்பி வைத்துள்ளமையை நினைவு கூர்ந்த சவுதி இளவரசர், தற்போதைய அரசின் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

சவுதி இளவரசர் இலங்கையின் அடிப்படை வசதிகளின் மீளமைபபுக்கு உதவவுள்ளதாகவும அவர் குறிப்பிட்டார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டமைக்காக மட்டும் சவுதி அரேபியா தமது உதவிகளை வழகாது நாடு முழுவதும் உள்ள அபிவிருத்திப் பணிகளுக்குரிய உதவிகளை தொடர்ந்தும் வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

கடநத காலங்களைப் போன்று இலங்கை மசகு எண்ணெய் தொடர்பில் நெருக்கடிகளை எதிர்நோககும் பட்சத்தில் உட னடியாக உதவி செய்ய சவுதி அரேபியா முன்வரும் என்பதையும் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது என்றும் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(க-9)

# இன்று ஒரு தகவல்

## தன்னம்பிக்கை

ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நபிகள் நாயகம் அதில் பேசிக்கொண்டிருக்கிறார். கூட்டத்திலிருப்பவர்களைப் பார்த்து அவர் ஒரு கேள்வி கேட்டார். "இந்த உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்தது இரண்டு உண்டு. அது நல்லதாக இருந்தால் இந்த உலகமும் நல்லதாக இருக்கும். அது கெட்டதாக இருந்தால் இந்த உலகமும் கெட்டுப் போய்விடும். அது இரண்டும் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்கிறார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் யோசிக்கிறார்கள். சரியான விடை தெரியவில்லை. உடனே நபிகள் நாயகமே அதற்குப் பதில் சொல்கிறார். அது இரண்டும் என்னவென்றால் ஒன்று அரசு, இன்னுமொன்று அறிவு என்றார். தனனம்பிக்கையோடு இருங்கள் என்று அவர் அடிக்கடி சொல்வார்.

தன்னம்பிக்கை என்பது என்ன? தன்னை நம்புவது, தன் வலிமையை நம்புவது, தன் அறிவை நம்புவது, அடுத்தவர்களின் துணையில்லாமல் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வது அதுதான் தன்னம்பிக்கை. இந்தத் தன்னம்பிக்கைக்கு சிங்கத்தை ஒரு உதாரணமாகக் கூறுவது உண்டு.

காட்டில் கரடி, புலி, ஓநாய் என்று எத்தனையோ விதமான மிருகங்கள் உள்ளன. பல விலங்குகள் எப்படிப்பட்டதென்றால் மான், முயல் இதுமாதிரி ஏதாவது கிடைத்தால் அடித்துக் கொனறுவிடும். வேண்டுமான அளவு சாப்பிடும். மீதியை தான் தங்கியிருக்கும் இடத்திற்கு இழுத்துக் கொண்டு போய் விடும் மறுநாள் சாப்பிடுவதற்கு.

அதனால் அதுபோன்ற விலங்குகள் தங்கியிருக்கும் இடங்களைப் பார்த்தால் மிகமோசமாக இருக்கும். கன்னாபின்னாவென்று சிதைந்து போன உடல்கள் கிடக்கும். துர்நாற்றம் வேறு. சகிக்க முடியாது. ஆனால் சிங்கத்தின் குகையைப் பார்த்தீர்கள் என்றால் எப்போதும் சுத்தமாக இருக்கும். தூய்மையாக இருக்கும். அந்தக் குகையில் எலும்போ தோலோ இருக்காது.

என்ன காரணம் தெரியுமா? சிங்கம் நன்றாகப் பசி எடுக்கும் வரை கவலைப்படாமல் இருக்கும். அமைதியாக, நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிக்கும். இனிப் பசியைத் தாங்க முடியாது என்ற நிலை வந்ததும் கண்ணை முழித்து எழுந்திருக்கும். குகையில் நான்கடி நடந்து குகைக்கு வெளியே வரும்.

ஆ... ஊ... என்று கர்ச்சிக்கும். இந்தச் சத்தம் எதிரில் உள்ள மலையில் மோதி எதிரொலிக்கும். காட்டில் உள்ள மான், முயல் எல்லாம் இந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு அங்குமிங்கும், குறுக்கும் நெடுக்குமாக ஓடும். அப்படி நிறைய ஓடிக் கொணடிருக்கும் விலங்குகளில் தனது குகைப் பக்கமாக ஓடிக் கொண்டிருக்கும் ஏதாவது ஒன்றைப் பிடிக்கும். வேண்டுமான அளவு கடித்துச் சாப்பிடும். மீதியை அப்படியே விட்டு விட்டு மெதுவாக நடந்து திரும்பிவரும். குகையில் படுத்து மீண்டும் தூங்க ஆரம்பிக்கும்.

அடுத்த நேரம் சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்படாது. அந்த அளவுக்கு ஒரு தன்னம்பிக்கை அதற்கு. தேவைப்படும் போது ஏதாவது ஒன்றைப் பிடித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எங்கே போகப்போகிறது... பசி எடுத்தால் இரைதானாகத் தேடிவரும். கவலை இல்லாத மாதிரி அது உறங்கும். சிங்கத்திடமிருந்து அந்த நம்பிக்கையை மட்டும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றதை எல்லாம் கற்கக் கூடாது.

பகுத்தறிவில்லாத விலங்குகளிடம் உள்ள தன்னம்பிக்கை பகுத்தறிவுள்ள மனிதர்களிடம் இல்லையே என்பது நபிகள் நாயகத்தின் வருத்தம். அவரை நினைக்கும் போதெல்லாம் நமக்கு தன்னம்பிக்கை வரவேண்டும். நல்ல சிந்தனைகள் வளர வேண்டும்.

நமது ஆட்கள் சிலரிடம் அந்த சிங்கத்தின் கதையைக் கூறி அதிலிருந்து என்ன கற்றுக்கொண்டாய் என்று கேட்டால் என்ன சொல்வார்கள் . தன்னம்பிக்கையை கற்றுக் கொண்டேன் என்றா சொல்வார்கள். "பேசாமல் சாப்பிட்டுவிட்டு, சாப்பிட்டுவிட்டுத் தூங்க வேண்டும்" என்று கற்றுக் கொண்டேன் என்பார்கள். அதனால் இந்தக் காலத்திலெல்லாம் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் கூட கவனமாக இருக்க வேண்டியுள்ளது.

ஒருவர் மதுவிலக்கு சம்பந்தமாக பிரசாரம் செய்தார். 10 பேரை உட்காரவைத்து விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு போத்தலில் சாராயத்தை ஊற்றி அதில் ஒரு புழுவைப் பிடித்துப்போட்டார். சிறிதுநேரத்தில் அந்தப் புழு அப்படியும் இப்படியும் துடித்தது. பின்பு இறந்தும் போனது.

இதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர். பேசியவர் கூட்டத்தைப் பார்த்து "இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டார். ஒருவர் எழுந்து நின்று "சாராயம் வயிற்றுக்குள் போனால் வயிற்றுக்குள் இருக்கும் பூச்சிகள் செத்துப் போய்விடும்" என்று தெரிந்து கொண்டேன் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

## வட-கிழக்கு மக்களின் உரிமை பாதுகாக்கப்படுவதுடன் நாடு பிளவுபடாத வகையிலும் யாப்பு அமைக்கப்பட வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க அரசை வலியுறுத்து

(சிலாபம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம பேச்சுவார்ததை நடாத்தி இறுதித் தீர்வு என்ன என்பது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், தெற்கினைப் போன்று வடக்கு-கிழக்கு மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் அதேவேளை, நாடு பிளவுபடாத வகையில் யாப்பு ஒன்று உருவாக்கபபட வேண்டும் எனவும் அவர் அரசைக் கேட்டுக்கொண்டார்.

சிலாபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மர்வட்ட செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

மீண்டுமொரு சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறுமானால் மக்களின் சமூக நலனுக்காகவென ஒதுக்கப்பட்டுள்ள 100 கோடி ரூபா வீண் விரயமாகும்.

இவ்வாறான பெரும் தொகையினைக் கொண்டு இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதுடன், பல்வேறு திட்டங்களையும் அமுலபடுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

அரசுககு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடு தழுவிய போராட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலிருந்து இந்தப் போராட்டங்களைப் பிரதேசசபை மட்டத்தில் ஆரம்பிக்குமாறு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த நிவாரணமாக 100 கோடி ரூபாவுக்கு மேல் சர்வதேச நாடுகளிடமிருந்து உதவியாகப் பெற்றுள்ள ஜனாதிபதி, ஒரு சதத்தைக் கூடப் பெறவில்லை எனத் தெரிவித்துள்ளார். அது எவ்வகையில் சாததியமாகும்? நியாயமாகும்? உண்மை நிலைவரம் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## மகளிருக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை

(கரணவாய்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் சிகை அலங்காரம், முதலுதவி,வீட்டுத்தோட்டம், கைப்பணி போன்ற பயிற்சிகள் மகளிருக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, மேற்படி நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-69)

## படகு கட்டும் நிலையம் குடத்தனையில் திறப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனைப் பகுதியில் நேற்று முன்தினம் படகு கட்டும் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிப்படைந்த கடற்றொழிலாளர்களின் படகுகளைத் திருத்தும் நோக்குடனும் புதிய படகுகளை கட்டும் நோக்குடனுமே இந்த படகு கட்டும் நிலையம் அங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாச உபபணிமனையின் ஏற்பாட்டில் இந் நிலையம் இயங்கவுள்ளது. (ந-43)

## வட- கிழக்கில் 1,034 பாடசாலைகள் கஷ்ட, அதி கஷ்ட பிரதேசங்களில் !

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் கஷ்ட மற்றும் அதிகஷ்டமான பிரதேசங்களில் இயங்குவதாக இனங்காணப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படையிலேயே இவ்வாறு பாடசாலைகள வகைப்படுத்தப்பட்டிருப்பதாக மாகாணக் கல்வித் திணைககள திட்டமிடல் பிரிவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாகாணங்களிலுள்ள 2003 பாடசாலைகளில் 756 பாடசாலைகள் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும்,278 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

இவற்றில் கடமையாற்றும் அதிபர்,ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. (ந-4)

## சம்பந்தன் விருது வழங்கலும் நூல் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவாக "சம்பந்தன் விருது" வழங்கும் விழாவும் இரு நூல் வெளியட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், வரவேற்புரையை செங்கை ஆழியானும், நினைவுரையை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் வழங்கவுள்ளனர்.

2004 ஆம் ஆண்டிற்கான சம்பந்தன் விருது பேராசிரியர் சி. மௌனகுருவுக்கு வழங்கப்படவுள்ளது. இந நிகழ்வில் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் துறவு-சம்பந்தன்,சைவத் திருமுறைப் பதப்பொருள் அகராதி-குமாரசாமி சத்தியபாமா ஆகிய இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன. வெளியீட்டுரையை கவிஞர் சோ. பத்மநாதன் வழங்கவுள்ளார். (ந)

## 355 பேருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

மரணதண்டனைக்குட்படுத்தப்பட வேண்டியவர்களின் தொகை 355 என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

மரணதண்டனை நியமிக்கப்பட்டவர்களில் ஒன்பது பேர் பெண்களாவர். வெலிக்கடை போகம்பர சிறைச்சாலைகளில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளில் 75 வீதமானவர்கள் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்களென சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கற்பழிப்பு,போதைப்பொருள் சம்பந்தமாக மரஹீதண்டனை பெறவுள்ள சிலரும் சிறைச்சாலைகளில் காணப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கடுழிய வேலையுடன் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தொகையும் 193ஆக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-9)

## பாதுகாப்பு ஊழியரை பாம்பு தீண்டியது

(கொழும்புத்துறை)

யாழ். பொது நூலகத்தில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு ஊழியர் பாம்பு தீண்டி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெறறுள்ளது. ஏ.நகுலன் என்ற நபரையே பாம்பு தீண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-51)

## 'சுனாமி' நிவாரணம் குறித்து ஆராய விசேட மாநாடு

(திருநெல்வேலி)

சுனாமி நிவாரணக் கொடுப்பனவுகள் சீராக இடம்பெறுகிறதா என்பதை பவ்ரல் அமைப்பு நடுநிலைமையுடன் ஆராயவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வடமராட்சி இன்பருட்டிப் பகுதியில் இது தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது. (ந-43)

## பாதாள உலகக்குழு உறுப்பினர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை ஜாஎல பிரதேசத்தில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் பொலிஸாரை நோக்கிக் கைக்குண்டு ஒன்றை வீச முற்பட்டபோதே பொலிஸார் பிரஸ்தாப நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் பிரஸ்தாப நபர் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் இதுவரை பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 19 பேர் வரை உயிரிழந்துள்ளதாகக் குற்றத்தடுப்பு நடவடிக்கைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரம ரட்ண தெரிவித்தார்.

குறிபபிட்ட சந்தேக நபரை வென்னப்புவ பிரதேசத்தில வைத்து கடந்த வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணையின் போது வெளியான தகவல்களுக்கு அமைய மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸ் குழுவொன்று சநதேக நபருடன் ஜாஎல பிரதேசத்துக்குச் சென்றது.

அவ்வேளையில் சந்தேக நபர் பொலிஸார் மீது கைக்குண்டை வீச முயற்சித்துள்ளார். அவ்வேளையில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில ஸ்தலத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் தப்பிச் செல்ல முயன்ற போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாகக்கிப் பிரயோகத்தில் 10 பேர் வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

பேதமை என்ப தொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல் - குறள்.

வலம்புரி

# பேரணிகள் கண்ட பயன்தான் என்ன?

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழ்விடங்களில் மீளவும் குடியமர்த்தக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியுள்ளனர்.

வலி.வடக்கு மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி 15 வருடங்கள் கடந்துவிட்டன. அவர்களும் காலத்துக்குக்காலம் பேரணிகளை நடத்தி தமது இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரிவருகின்றனர்.

எனினும் வலி.வடக்கு மக்கள் நடத்தும் பேரணிகளுக்கு அரசோ அன்றி இராணுவமோ, சர்வதேச சமூகமோ அக்கறைகொள்வதாகவில்லை.

பொன்விளையும் மண்ணைக் கைவிட்டு அகதி முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் வாழும் வலி. வடக்கு மக்களின் துயர் களைவதற்கு உயர் பாதுகாப்பு வலயம் ஒருபோதும் இடந்தரப்போவதில்லை. இது உறுதி.

இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்கள் மீளவும் தமது குடியிருப்புக்களில் வாழவேண்டுமாயின் அதற்கான ஒரேவழி உயர் பாதுகாப்பு வலயத்தை இல்லாதொழிப்பதாகும்.

உயர் பாதுகாப்பு வலயம் இல்லாதொழிக்கப் படுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. அதில் ஒன்று இலங்கை அரசு, விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபையை ஒப்படைத்தல், மற்றையது அங்குள்ள இராணுவத்தை வெளியேற்றுவது. இது யுத்தத்தின் மூலமே சாத்தியமானதாகும்.

வலி.வடக்கு மக்கள் பல தடவைகளாக நடத்துகின்ற பேரணிகள் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் சமர்ப்பிக்கின்ற மகஜர்கள் பற்றி உரியவர்கள் எதுவித அக்கறையும் கொள்ளாவிட்டால், இரண்டாவதாக முன்மொழியப்பட்ட வழிமுறையே சாத்தியமானதாகும்.

இதனைப் இப்பகுதியில் எழுதுகின்றபோது அது யுத்தத்தை தூண்டுவதாக, சமாதானத்தைக் குழப்புவதாக அமையுமென சமாதானத்தை உள்ளூர விரும்பாதவர்கள் கூறிக்கொள்ளலாம். ஆனால் சொந்த நாட்டில், சொந்த மண்ணில் சொந்த வீட்டில் குடியிருக்கமுடியாது போகும்போது அதற்காகப் போராடுவது அவசரமானதும், அவசியமானதும், ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுமாகும்.

இந்தப் போராட்டத்தையே வலி. வடக்கு மக்கள் அகிம்சை வழியில் நடத்திவருகின்றனர். எனினும் அதற்கான மதிப்பை இலங்கை இராணுவம் வழங்கவில்லை. வலி. வடக்கு மக்களின் கோரிக்கையை மனிதாபிமானமுள்ள எந்த இராணுவமும் ஏற்றுக்கொள்ளும்.

இலங்கை இராணுவம் இலங்கை முழுவதுக்குமான இராணுவமாக இருந்தால் நிச்சயமாக வலி. வடக்கு மக்கள் நடத்திய அகிம்சைவழிப் பேரணிகளுக்கு மதிப்பளித்து அவர்களை உரிய இடங்களில் குடியமர்த்துவதற்கான அனுமதியை வழங்கும்.

தமிழ்மக்களுக்கு உரிமைவழங்க இலங்கை அரசு தயாரெனக் கூறுவது மெய்யாயின் சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்குமென இராணுவத் தளபதிகளால் விடுக்கப்படுகின்ற அறிக்கைகள் உண்மையானவையாயின் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர விடுவதில் எந்தத் தடையும் இருக்கமுடியாது.

ஆக, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் அரசுடனும், இராணுவத்துடனும் பேசுவதில் - பேரணிகள் நடத்துவதில் எந்தப் பயனுமே இருக்கப் போவதில்லை.

# எக்காரணம் கொண்டும் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் ஒப்படைக்கப்படக்கூடாது

## ஹெல உறுமய பேச்சாளர் வலியுறுத்து

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி மற்றும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு போன்ற விடயங்களுக்குத் தமது கட்சி ஆதரவு வழங்கமாட்டாது என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஸாந்த சிறி வர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

தமது யாப்பில் தெரிவித்துள்ளதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி மற்றும் கருத்து வாக்கெடுப்பு என்பனவற்றை ஏற்றுக் கொள்ளமுடியாது. இது தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமஷ்டி முறையிலான நிர்வாகத்துக்கும் தமது கட்சி ஆதரவு வழங்க முடியாத நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் சமஷ்டி முறையிலான நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்கக்கூடாது. ஏற்கனவே வரி மூலமும் சுனாமி அனர்த்த நிவாரணம்மூலமும் கிடைக்கும் பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க சமஷ்டி நிர்வாகத்தையும் வழங்கினால் விடுதலைப் புலிகள் பணப்பலம் பெற்று எவராலும் அசைக்க முடியாதளவிற்கு மேலும் வளர்ந்துவிடுவர்.

எனவே எக்காரணத்தைக்கொண்டும் விடுதலைப் புலிகளிடம் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் ஒப்படைக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# சர்வதேச நிதியுதவிகள் குறித்த ஜனாதிபதி உரையின் உண்மையை பீரிஸ் திரிவுபடுத்தி வெளியிடுகிறார்

## ஜனாதிபதி செயலக அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தினால் உறுதிவழங்கப்பட்ட சுனாமி நிதி உதவிகளில் ஒரு சதமேனும் தனது கைக்கு வந்து சேரவில்லை என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்ததை ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் திரிவுபடுத்தியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உறுதி வழங்கிய நிதியுதவிகள் அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்திற்கும் பிரதமர் நிதியத்துக்குமான நிதியுதவிகள் மட்டுமே கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிதியுதவிகள் தொடர்பான விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டதாகவும் எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் உதவிகள் பகிரங்கப்படுத்தப்படும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உறுதி வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியுதவிகள் சுனாமி அனர்த்த நிவாரண புனரமைப்புக்காகவும் அபிவிருத்திக்காகவும் மட்டுமே பயன்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கேள்விப்பத்திரம் கோருதல், ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தல் போன்றவற்றிற்கான பொறுப்பு உறுதிவழங்கியுள்ள நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அரசின் திட்டங்களுக்கு அமைய குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச நாடுகள் வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. மேலும் அவற்றைக் கண்காணிப்பது மட்டுமே அரசின் பணி எனவும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# பொதுக் கட்டமைப்பு குறித்த இணக்கப்பாட்டை விடுதலைப்புலிகள் இவ்வாரம் அறிவிப்பர்?

## நோர்வே உறுதியளித்துள்ளதாக ஜயந்த தனபால நம்பிக்கை

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இணக்கப்பாட்டை இவ் வாரம் உத்தியோக பூர்வமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நோர்வேத் தரப்பு உறுதியளித்துள்ளதாக அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றதும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசாங்கம் அறிவிக்கும் எனத் தெரிவித்த ஜயந்த தனபால பொதுக் கட்டமைப்புக் குறித்து ஒப்பந்தம் ஒன்றும் விரைவில் கைச்சாத்திடப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஏற்படும் தாமதமே வடக்கு-கிழக்கு சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளாமைக்குக் காரணமாகும்.

வடக்கு-கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் பொதுக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவே அதனை நாம் வழங்கத் தயாராகவுள்ளோம்.

இந்தப் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்து அரசின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா சு.ப. தமிழ்ச்செல்வன் வெளிநாடு சென்றுள்ளதால் அதற்கான பதிலில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதில் எமக்குள்ள ஆர்வமும், வடிவமும் குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றி எமக்கு எதுவும் தெரியாது. எனவே, விடுதலைப் புலிகள் தமது இணக்கப்பாட்டை விரைவில் எமக்கு அறிவிப்பர் என நம்புகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# உ.மன்ற தலைவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி

(கொழும்பு)

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கென வெளிநாடுகளில் விசேட பயிற்சிகள் வழங்கும் திட்டமொன்றினை இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இவர்களுக்கான ஒருவார கால பயிற்சியினை இந்தியாவின் கேரள மாநிலத்தின் திரிசூர் மாவட்டத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதன் பொருட்டு தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு நிர்வாகத்தின் பன்முக ஆளுமை மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன.

ஏற்கனவே பயிற்சிக்கென தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைத் தவிசாளர்களின் முதலாவது குழுவினர் கேரளாவிற்கு சென்றுள்ளனர். (க-9)

## நிதியுதவி

மீசாலை மேற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தரும் இணைந்து பொதுமக்களிடம் சேகரித்த ஒரு லட்சம் ரூபா நிதியை வடமராட்சியில் சுனாமியால பாதிக்கப்பட்ட மற்றும் தாய், தந்தையை இழந்த சிறார்களுக்கு வழங்கவுள்ளனர். (க-69)

# தற்காலிக பாதையூடாகவே போக்குவரத்து இடம்பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட கைதடிப்பாலமூடாக கடந்த சில நாட்களாக இடம்பெற்ற போக்குவரத்து மீண்டும் தற்காலிக பாதையூடாகவே நடைபெறுகின்றது.

கைதடிப்பாலத்தின் நிர்மாணப் பணிகள் முற்றாகப் பூர்த்தியாக்கப்படாத நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பரீட்சார்ந்த நடவடிக்கையாகவே இப்பாலத்தின் ஊடாக போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பாலத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தற்காலிக பாதையூடாகவே தற்போது போக்குவரத்து இடம்பெறுகின்றது. (ற-16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆன்மீகப் பாதை என்பது கத்தி முனையில் நடப்பது போன்றது தான் அதில் செல்வது மிகவும் கடினமானதுதான். ஆதலால் வலிமையான இதயம், உறுதி தளராத நம்பிக்கை ஆகியவையே நமக்கு இருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் ஐயா, வைத்தியநாதன் ஐயா (இருபாலை கிழக்கு இலிங்கப் பிள்ளையார் கோவில் அர்ச்சகரும் பரிபாலகரும் கோப்பாய் மகா வித்தியாலய ஆசிரியரும்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாக வும் இருபாலை கிழக்கு இலிங்கப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் வைத்தியநாதன் ஐயா 16.03.2005 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன், திருநீலநாயகி தம்பதி களின் செல்வப் புதல்வனும், அளவெட்டியை சேர்ந்த காலஞ் சென்ற இராசலிங்கம், சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், சூரிய குமாரியின் (வவா) அன்புக் கணவரும், லிங்கவிநாயகியின் பாச மிகு தந்தையும், கேசவன் ஐயாவின் பாசமிகு சிறிய தந்தையும், பாஸ்கரன் ஐயா, வரதாம்பிகை, காலஞ்சென்ற செந்தில்நாதன், கிஸ்ணவேணி (கனடா), வேதநாயகி (அவுஸ்திரேலியா), கற்பக நாதன் (கனடா), சுசீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோ தரனும் கெங்காமலர், வருணநாதன் (சுகாதார வைத்திய பொறுப் பதிகாரி மானிப்பாய்), சற்குணதேவி, யோகநாதன் (கனடா), சந் திரலிங்கம் (அவுஸ்திரேலியா), இராஜராஜேஸ்வரி (கனடா - மங் களம்), பவித்திரா (கனடா), காலஞ்சென்ற உதயகுமார், சூரிய குமார், உதயகுமாரி, தேவகுமார், (லண்டன்), தேவகுமாரி, சுரேஸ் குமார் ஆகியோரின் மைத்துனரும் சயந்தன், பார்த்தீபன், சரவ ணன், மயூரன், மயூரி ஆகியோரின் சிறிய தந்தையும், சர்மினி, சண்முகி, கவிதரன், கர்சனன் ஆகியோரின் பெரிய தந்தையாரும் சாந்தசொரூபன், கஜானன், திரியம்பதி, ஹம்ஸ்த்வனி, கௌரீசன், விதுஜா, மேனகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.03.2005 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட் டுக் கொள்கின்றோம்.

**இலிங்கப் பிள்ளையார் கோயில்**
**இருபாலை - கிழக்கு**
**கோப்பாய்**

தகவல்
மனைவி
தொ.பே. 0777 - 676263

(9299)

## திருப்பாடுகளின் காட்சி

யாழ். திருமறைக் கலாமன்றத் தில் நடைபெற்றுவரும் திருப்பாடு களின் இறுதி நாள் காட்சி இன் றாகும். இதனை முன்னிட்டு இரவு 7 மணிக்கு 1 வது காட்சியும், 2 வது காட்சி இரவு 10 மணிக்கும் நடைபெறும். (ந)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
குளிரூட்டியது
விஜய், திரிஷா நடித்த
கில்லி
கா.நேரம்:10.30(பு.நே)மட்டும்
ஸ்ரீகாந், பூமிகா நடித்த
ரோஜாக் கூட்டம்
கா.நேரம்:2.30,6.30,9.30 (பு.நே)
21.03,2005 முதல்
THE PASSION OF THE CHRIST
(இயேசு நாதரின் கதை)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு
அங்கீதா நடித்த

லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு
செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)

நிறைஞ்சனாஸ்
17.03.05இருந்து சங்கானை
விஜய், சுபலட்சுமி, சங்கவி
நடித்த

நிலாவே வா
கா.நே 11.00, 2.45 6.00 (பு.நே)


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1942 |  | 1999 |
| - | | - |
| 01 | | 03 |
| - | | - |
| 08 | | 12 |

## தம்பிப்பிள்ளை கணேசராசா
### (முன்னாள் C.T.B. காப்பாளர்)

ஒரு கூட்டுக் கிள்ளைகளாய் இருந்த காலம்
இரை தரும் தந்தையாய் இருந்த காலம்
கண்முன் தொலைத்தோம் உங்களையெம் - ஒவ்வொரு
கருவிலும் தேடுகிறோம் மறுபிறப்பாய்.

**23, புறாடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்**

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(c/1170)

# கண்ணீர் காணிக்கை துளிகள்

## சண்முகநாதன் ஐயர், வைத்தியநாதன் ஐயர் (நாதன் ஐயா)

### இருபாலை கிழக்கு இலிங்க பிள்ளையார் கோவில் அர்ச்சகரும் பரிபாலகரும்

| மண்ணுலகப் பேறு | | சிவபதப்பேறு |
|---|---|---|
| 15 |  | 16 |
| 01 | | 03 |
| 1963 | | 2005 |


**அன்னாரின் பிரிவால் துயர் உற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.**

**கற்பக பிள்ளையார் கோவில், இருபாலை, கோப்பாய்**

**துயர் பகிர்பவர்: சிவஸ்ரீ பா.செல்வசேன குருக்கள் குடும்பத்தினர்**

(9300)

# இதய அஞ்சலி

| மண்ணில் மலராய் | | விண்ணில் நட்சத்திரமாய் |
|---|---|---|
| 15 |  | 16 |
| - | | - |
| 01 | | 03 |
| - | | - |
| 1963 | | 2005 |

## அமரர் சண்முகநாதன் வைத்தியநாதன்

**இருபாலை கேணிக்குளம்பதி இலிங்க விநாயகர் தேவஸ்தான பரிபாலகரும் பிரதம அர்ச்சகரும் கோப்பாய் மகாவித்தியாலய ஆசிரியருமாகிய அமரர் சண்முகநாதன் வைத்தியநாதன்.**

விக்கித்துப் போய் நிற்கின்றோம்
விம்மி அழுதிட முடியவில்லை
அழுது தொலைத்திட முடியாத சோகமிது
மறக்க முடியாது உம் மறைவு

வெண்மை நிற ஆடையும்
பொட்டிட்ட நெற்றியும்
புன்சிரிப்பும் புனித நீறும்
அன்பான பேச்சும் தங்கமனசும்
மங்கா அறிவும் கொண்டவர நீர்!

**உமது பிரிவால் நொந்து போயிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இலிங்க விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவின் ஆற்றாமைக்கனலைச் சுமக்கும்
பாச உள்ளங்கள்

திரு.கி. தங்கவடிவேல் (J.P)
திரு.சோ. விஜயரூபன்
திரு.இ. ரகுமார்
திரு.ஆ. ஜெயன்

**கோப்பாய் தெற்கு**


EXPOAIR
யாழ் கொழும்பு

தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,
Your friend in the skies...
வானத்தில் உங்கள் நண்பன்...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.